தை - மாசி - பங்குனி - 2001

"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM



நெதர்லாந்து
ஸ்ரீ செல்வ விநாயகர்
பொங்கல் சிறப்பிதழ்

லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00

Royal Jewelry

SML

புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!



* மனம் கவரும் தங்க நகைகள்

*தங்கம் - கரட் உத்தரவாதம்

*தாலி - பொன்னுருக்கல் வசதிகள்

*உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ணம் நகைகள் பிரத்தியேகமாய் தயாரிக்கும் வசதிகள்

* சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்

# ரோயல் ஜுவல்லரி

**287, HIGH STREET NORTH ,**
**EAST HAM, MANOR PARK,**
**LONDON E12 6SL**
**Tel: 0208 472 5500**

ஆசிரியர் தலையங்கம்

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

மணி 9

கலசம்
KALASAM

ஒலி 33

தை–மாசி–பங்குனி 2000

## காத்திருப்போம் இறைவா!

கடவுள் என்கின்ற கருத்து உயிரினங்களைச் சார்ந்ததே!
ஒரு உயிரின் பிறப்பு, இறப்பு இவற்றுக்கான ஒரு அர்த்தமுள்ள விளக்கமே கடவுள் என்கின்ற கருத்து வடிவமாகும். ஒரு உயிர் பிறக்கும்போது அழுவதும் இறக்கும்போது சிரிப்பதும் சைவ சித்தாந்தம் தரும் உண்மையாகும். இறப்பையிட்டு சக மனிதர் வருந்துவதும் அழுவதும் மனிதனுடைய கர்மாவாகும். சமீபத்தில் உலகமே வெட்கித் தலைகுனியும் வண்ணம் இலங்கையில் நடந்த அப்பாவித்தமிழ் மக்களின் கொலை குறித்துக் கலசம் வேதனை கொள்கின்றது.
உலக மகாகவி பாரதியார் பகன்றது போல்,

ஆடுதல் பாடுதல் சித்திரம்
கவியாதினைய கலைகளில்
உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர்
பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர்

என்பதற்கமைய கலசம் உண்மையிலேயே கலங்குகின்றது.
உலகில் நீதி, நியாயம், உண்மை, இனிமை போன்றவற்றின் மறுவடிவமே கடவுள் என்று எல்லாச் சமயங்களும் சாற்றுகின்றன. இதனால்தான் கடவுள் எல்லோராலும் கையெடுத்து வணங்கப்படுகின்றார். ஆலயங்களில் ஒரு தீமைக்குத் துணைநிற்கும்படி ஒரு பக்தன் கடவுளைக் கேட்கும்போது அவனின் கோரிக்கையைக் கேட்பதற்கு கடவுளின் அம்சம் அங்குள்ள சொரூபத்தில் இருப்பதில்லை என்பது சித்தாந்த உட்கிடக்கையாகும். ஆதலால் இறைவன் யாருக்கு உதவப்போகிறார் என்று உங்களுக்குள் வினாத்தொடுக்காமல் இறைவனின் செயற்பாட்டுக்காகப் பொறுமையுடன் காத்திருப்பதே சாலச் சிறந்ததென்று கலசம் கருதுகின்றது.
இவ்விதழில் பல நல்ல கட்டுரைகள் வருகின்றன. விஞ்ஞானத்தையும் மெஞ்ஞானத்தையும் இணைத்தும் ஒளிவழிபாட்டின் முக்கியத்துவம்பற்றியும் சின்முத்திரையின் தத்துவம்பற்றியும் மிகத்தெளிவான கட்டுரைகள் வருகின்றன. அத்தோடு நெதர்லாந்து பிள்ளையார் ஆலயமும் ரூட்டிங் முத்துமாரியம்மன் ஆலமும் தங்கள் ஆலய நிர்மாணத்துக்குக் கலசம் மூலம் உதவிகோரி நிற்கின்றன. இப் பொங்கற்திருநாளில் உங்களுக்குப் பொங்கல் வாழ்த்துக்களை நல்குவதோடு நம் நாட்டு மக்கள் சகல சுபீட்சமும் பெற்றுப் வாழவேண்டுமென்று மனதாரவேண்டி விடைபெறுகின்றேன்.

ஓம் நமசிவாய

ஆசிரியர்

# கலசம் 33

## உள்ளே......


ஸ்ரீ ரமண மகரிஷி......3
இல்லாதது தோன்றாது....7
சபரிமலையில்......... 11
மனிதனும் ஒளிவழிபாடும்......13
சிறுவர் கலசம்......17
சிவாவும் மார்க்கண்டேயரும்.....19
நாவலரும் சிவசங்கர பண்டிதரும்....26
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்........32
நெதர்லாந்தில் ஓர் ஆலயம்........34
வரம் ஒன்று தரவேண்டும்.....35
இலண்டன்டன் முத்துமாரியம்மன் ஆலயம்.....36
சின் முத்திரைத் தத்துவம்.......38




அன்பு நிறை
வாசகர்களுக்குக் கலசம்
ஆசிரியர் குழு சார்பாகவும்
சைவ முன்னேற்றச் சங்கம்
சார்பாகவும் தன் பொங்கல்
வாழ்த்துக்களை அன்போடு
தெரிவித்துக் கொள்கின்றது



### அட்டைப்பட விளக்கம்

நெதர்லாந்தில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் தோற்றத்தையும் அவ்வாலய முன்றலில் பொங்கற்றிருநாள் வைபவம் வடைபெறுவதையும் காணலாம்.


**ஆசிரியர்:**
திரு மு. நற்குணதயாளன்
**துணை ஆசிரியர்:**
திரு சி. அற்புதானந்தன்
**நிர்வாகம்:** திரு வ.இ. இராமநாதன்
**உதவி நிர்வாகம்:** திரு சிவ அசோகன்



**57, Blandford Waye, Hayes, Middlesex, UB4 0PB England**
**Tel: 0208 573 0368**
**Fax: 0208 573 4233**




**நிர்வாகக்குழு:**
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன், திரு சி. தர்மலிங்கம்
Dr, N, நவநீதராசா, திரு S. சிறீரங்கன்
திரு பால. ரவீந்திரன்
திரு இ. சிவானந்தராசா
திரு வைத்தியநாதக் குருக்கள்

# ஸ்ரீ ரமணமகரிஷி

**சென்ற இதழ்த் தொடர்ச்சி**

## மகா ஜயந்தி பொன் விழா

அன்னையின் மகா பூஜையின் போதும் ஸ்ரீமக ரிஷிகளின் ஜயந்தியின் போதுங் கூட இந்த ஆச்சிரமத்தின் நடைமுறை தவறாது பேணப்படும். இவ்விரண்டு நாட்களிலும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் ஆசிரமத்தை வந்து அடைவர். அவ்வளவு பேருக்கும் அன்ன மிட ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கும். ஜயந்தியைக் கொண் டாடுவது மகரிஷிகளுக்கு பிடிக்கவில்லை. பக்தர்களின் கட்டாயத்துக்காக இதை



அனுமதித்திருக்கிறார். இந்தச் செலவுகளுக்கெல்லாம் பொது ஜனங்க ளிடமிருந்து பணம் நன்கொடையாகக் கிடைக்கின்றது. சாமான்களாகவே சிலர் அனுப்புகின்றனர் சிலர் பணமாகக் கொடுக்கின்றனர் குறிப்பிட்ட சமயத்துக்குள் எல்லா சாமான்களும் எப்படியோ வந்து நிரம்பிவிடும்.


ஜயந்தியைக் கொண்டாட ஏற்பாடு செய்து வந்த ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரை வேறு ஊருக்கு மாற்றியதும் ஜயந்தி தினக்கொண்டாட்டம் நின்று விடும் போல் தோன்றியது. போன வருடம் பத்து மூட்டை அரிசி சமைத்தோம். இந்த வருஷம் ஒரு மூட்டை கூட இருக்காது போல் தோன்றுகின்றது என்று ஒரு பக்தர் வருத்தத்துடன் மகரிஷிகளிடம் முறையிட்டார். அன்று நடுநிசியில் வாயிற் கதவை யாரோ தட்டிக் கூப்பிடவே கதவைத் திறந்தனர். அன்னதானத்திற்கு வேண்டிய சாமான்கள் யாவும் நிரம்பிய இரண்டு கட்டை வண்டிகள் வந்து நின்றன. பிரார்த்தனைக் காணிக்கை என்று சொல்லிச் சாமான்களை இறக்கிவிட்டுக் பெயரைக்கூடத் தெரிவிக்காமல் வண்டிக்காரர் திரும்பிவிட்டார். ஆசிரம கைங்கரியம் செழித்து ஓங்கியது இவ்வாறே. இப்படியே தான் இன்றும் நடந்து வருகிறது. ஸ்ரீமகரிஷிகள் எளிய வாழ்க்கைக்கு ஒரு நிதர்சனம் ஆவார். முதன் முதல் திருவண்ணாமலையை அடைந்து அன்று அணிந்தமர்ந்த கௌபீனமே இன்றும் ஆடையாக இருந்து வருகிறது. தமக்கு புஷ்ப மாலை சூட்டுவதைக் கூடக் கண்டிப்பாக மறுத்துவிடுவார். ஆகவே அபிஷேகம் போன்ற படாடோபங்களை ஆசிரமத்தில் காணமுடியாது. பகவத் கைங்கரியத்துக்காகப் பல பக்தர்கள் பணம் கொடுத்து உதவி வருகின்றனர். ஆனால் மகரிஷிகள் பணத்தைக் கையாலும் தொடுவதில்லை. ஆரம்பத்திலிருந்தே லௌகீக காரியங்களை மற்றவர்களே கவனித்து வரலாயினர்.

மகரிஷிகளின் சகோதரர் ஸ்ரீ நிரஞ்ஜனானந்த சுவாமி இந்த வேலைகளை எல்லாம் மேற்கொண்டு ஆசிரமத்தை சீரும் செட்டுமாகச் சிறப்புடன் நிர்வகித்து வந்தார். பகவான் 1896ம் ஆண்டு அருணையை அடைந்து ஸ்வயம்புவாய் ஸஹஜாத்ம நிஷ்டையில் அமர்ந்து ஐம்பதாண்டு பூர்த்தியானதை முன்னிட்டு 1-9-1946ல் பொன் விழாக் கொண்டாடினார்கள். அச்சமயம் பக்த கோடிகள் பகவானது பாத கமலத்தில் அமர்ந்து இன்புற்றுப் புழகாங்கிதர்களாய் நாநா விதமாகத் தோத்திரஞ் செய்து தாங்கள் பெற்ற பேரின்பத்தை வியந்து தங்கள் உள்ளம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்து ஜன்ம சாபல்யம் அடைய அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்தித்தனர். பேறறிஞர் ஸர் எஸ் ராதாகிருஷ்ணன், கவி கிராண்டப் போன்ற அறிஞர் பலர் பகவானின் அநுபூதி மகிமையை வியந்து எழுதிய கட்டுரைகளும் நிரம்பிய ஒரு பொன் விழா மலர் இவ்வரிய சம்பவத்தின்

ஞாபகார்த்தமாக பிரசுரமாயிற்று.

## அருணாசல மகிமை

அருணாசலத்தின் மகிமையோ மகிமை! சிறு பருவத்திலே கேட்ட மாத்திரத்தில் மகரிஷிகளின் உயிரிலே ஞானச் சிலிர்ப்பை ஊட்டியது அருணாசலம் என்னும் நாமம். மூத்த சகோதரனது கோப மொழிகள் நிமித்த மாத்திரமாக வீட்டைத் துறந்து நேரே அவர் வந்தடைந்தும் அருணா சலமே.



பின்னர் அவர் நிரந்தரமாகத் தங்கித் தவத்தே திளைத்ததும் அருணாசலத்தின் மீதே. இப்போது அமைந்துள்ள ஆச்சிரமம் இருப்பதும் அருணாசலத்தின் தென்புறச் சாரலிலேதான். ஜோதி மலை என்று பேர் பெற்றது அருணாசலம். பல்லாண்டு பல்லாண்டுகளாகப் பாரததேசத்தினர் புனித தேசமாகப் போற்றிப் புகழ்ந்து வருவது அருணாசலம். தேஜோ லிங்கம் என்று தொழுது ஏத்தப்படுவது அருணாசலம். தக்ஷிண கைலாயம் என்றும் இதைப் போற்றுவர். உத்தரகைலாசத்தை விடத் தொன்மையானது இது என்றும் சிலர் கூறுவர். கர்ண பரம்பரையாகவும் பூகோள சாஸ்திரப் பிரமாணத்தின் படியும் பார்த்தால் இமய பர்வதம் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்பாகவே இந்த மலை இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது.

பூகோளத்தின் உள்ளே நிலக்கரி பாளங்கள் ஏற்பட்ட காலத்துக்கு முன்னாலேயே அருணாசலம் இருந்திருக்கிறது என்று பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தக் கருங்கல் மலையின் காலம் கோடானு கோடி வருடங்களுக்கு முற்பட்டதென்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். பூகோளத்தின் ஆரம்ப காலத்துடன் இதன் சரித்திரம் தெடங்குகிறது. தொன்மையான காலத்திலே உயிர் வாழ்ந்த தாவரப் பிராணி வர்க்கங்களின் அடை யாளங்களை முத்திரை ரூபமாக இன்று நமக்கு அறிவிக்கும் மணற்பாறைப் பிரதேசங்கள் ஏற்பட்ட காலத்துக்கு முன்னே சாவ்ரியன்ஸ் என்று அழைக்கப்படும் பிரம்மாண்டமான அமானுஷ்ய பிராணிகள் மலைபோன்று பருத்த தங்களது உருவங்களை இழுத்துக்கொண்டு பூர்வ கால வனாந்தரங்களிலே ஊர்ந்து திரிந்த காலத்திற்கு முன்னமேயே இந்த மலை இருந்து வந்திருக்கிறது. இது மட்டும் அல்ல, இந்தப்பூமி உருவெடுத்த அன்றே அருணாசலமும் உண்டாயிற்று என்பது அவர் அபிப்பிராயம். ***கடலிலே மூழ்கி மறைந்து போன லெமூரியாக் கண்டத்தின் எஞ்சியபாகம் தான் அருணாசலம். !***

புனித ஷேத்திரங்கள் யாவற்றிலும் புனிதமானது உலகத்தின் ஹிருதயமாகிய அருணாசலம் என்று ஸ்ரீ ஸ்கந்த புராணம் கூறுகின்றது. அக்னியே தனது சொரூபமாயினும் மலையின் வெளித்தோற்றம் சாந்தத்தைக் கொண்டிருப்பது உலகத்தின் உயர்வை உன்னிச்சுரக்கும் அருளையும் அன்பையும் குறிப்பதாகும். ***இங்கேதான் பரிபூரணனாம் நான் என்றும் குடிகொண்டுள்ளேன். ஆகவே ஆகவே உலகம் அனைத்தையும் தன்னுட்கொண்ட ஆத்மஜோதி அருணாசலதின் ஹிருதயத்திலே விளங்குகின்றது என்று தியானி*** என்பது சிவபெருமானின் வாக்கு. எத்தனையோ திவ்விய கணங்கள் இந்த மலையில் சஞ்சரித்து வருகின்றன என்று மகரிஷிகள் கூறியதாக ஸ்ரீ பிராண்டன் குறிப்பிடுகின்றார். சித்தஜயம் பெற்ற சித்த புருஷர் பலர் இங்கே வசிப்பதாகவும் அண்ணாமலையை வழிபட்டுப் பற்பல பேறுகளைப் பலர் பெற்றுளர், என்றும் அருணாசல மகாத்மியம் கூறுகின்றது. பிரதி வருஷமும் லட்சத்துக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் கார்த்திகை தீபத்தின் போது திருவண்ணாமலைத் தரிசனத்துக்கு வருகின்றனர். கிருத்திகா பௌர்ணமியன்று மாலை மலையுச்சி யிலேயுள்ள பெரிய தீபம் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்ததும் லட்சக்கணக்கான ஜனங்கள் சாஷ்டாங்கமாக தரையில் வீழ்ந்து அண்ணா மலைக்கு அரோஹரா என்று கூவி அஞ்சலி

செய்வர். தீபத்திலே இடப்படும் கர்ப்பூரமும் நெய்யும் வர்த்தியும் சேர்ந்து பல நாட்கள் எரியும் ஜோதி பல காதங்கள் வரைக்கும் தென்படும். தூரத்துப் பார்வைக்குக் கரடு முரடானதாகத் தோன்றினாலும் அருகில் சென்று பார்த்தால் மலையிலே பல அழகான காட்சிகள் தென்படும். காட்டு மிருகங்கள் வாழும் அடர்ந்து அழகிய பெரும் அடவிகளும் உண்டு. மகரிஷிகளுக்குத் தெரியாத இடம் மலை மீது ஒன்றுமில்லை. முற்காலத்தில் மகரிஷிகள் அடிக்கடி காட்டுக்குள் சென்று உலவி வருவது உண்டு.

எல்லாவற்றையும் விட வனப்பு வாய்ந்த ஸ்தானம் ஒன்று மலையின் மேல் உண்டு. மகரிஷிகள் இதைச் சுட்டிக் காட்டிய போதிலும் மற்றவர்களால் அதைக் கண்டு பிடிக்க முடிவதில்லை. வெகு அழகான இடம் வானுற உயர்ந்து ஓர் இலையில் ஓருவர் உண்ணுமாறு விரிந்த இலைகளை உடையதாக ஓங்கிப் பரந்த ஆலின் கீழ் அடர்ந்த புதர்கள் சூழ்ந்த ரமணீயமான இடம். இங்கே தான் அருணாசல மகாசித்தர் உறைவதாகக் கூறப்பட்டுள்ளது. மலையின் உச்சியில் இருந்து பார்த்தால் இந்த மனோகரமான இடத்தைக் காணலாமாம். ஆனால் எத்தனையோ பக்தர்கள் அரும்பாடுபட்டும் இத்தலத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. போகும் வழியும் அவ்வளவு கடினமானது. செங்குத்தான வழுக்குப் பாறைகள் நிறைந்தது. மலையைச் சுற்றிவர நல்ல பாதை இருப்பது காலையிலும் மாலையிலும் கிரிப்பிரதக்ஷிணம் செய்வதற்கு சௌகரியமாக இருக்கிறது. மற்ற நாட்களைவிடச் செவ்வாய் முதலிய புனித தினங்களில் கிரிப்பிரதக்ஷிணம் செய்வோர் தொகை அதிகமாகும். மகரிஷிகள் கிரிப பிரதக்ஷிணத்துக்குப் புறப்படும் போது கூட்டம் ஏராளமாகி விடும். இதைத் தவிர ஒவ்வோர் இடத்திலும் மகரிஷிகளைத் தங்கச் செய்து பிரசாதங்களைக் கிரகிக்குமாறு வேண்டும் ஜனங்களின் தொகையும் அதிகரித்து வந்த படியால் ஒவ்வொரு சமயம் அந்த எட்டு மைலையும் சுற்றிவரப் பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிவிடும். கிரியைச் சுற்றிலும் புண்ணிய தீர்த்தங்களும் ஆலயங்களும் பல உண்டு. ஆதியில் ஸ்ரீ மகரிஷிகளே அவ்விடங்களில் இருந்திருக்கிறார். ஆகவே ஒவ்வோர் இடத்திலும் பக்தர்கள் மகரிஷிகளை உபசரித்துப் பிரசாதத்தை அவர் முன்னிலையில் விநியோகிப்பது வழக்கம். இவ்வாறு கூட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்கவே மகரிஷிகள் கிரிப்பிரதக்ஷிணத்துக்குச் செல்வதே கிடையாது. ஆனால் மற்றோர் வழக்கம் மட்டும் இன்றும் மாறாமல் நடந்து வருகிறது. கார்த்திகை தீபத்தன்று மாலை மலையை நோக்கியிருக்கும் மகரிஷிகளைச் சூழ்ந்திருப்பர். பக்தர் மலை யுச்சியிலே தீபம் ஏற்றப்பட்டதும் மகரிஷிகளின் சந்நிதியிலும் நெய்ச்சுடர் ஒன்றைக் கொளுத்தி அருணாசலேசுவரரைப் போற்றி மகரிஷிகள் அருளியுள்ள அக்ஷரமணமாலையைப் பாடுவர், இச்சமயத்தில் ஏற்படும் பாவனமான பக்தி வெள்ளத்தையும் உள்ளக் கிளர்ச்சியையும் ஒருமுறை அனுபவித்த பக்தர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் மறுமுறை இதற்கு வராமல் இருப்பதில்லை.

அருணாசலஸ்துதி பஞ்சகம் என்பது அருணாசலேசர் மீது மகரிஷிகள் அருளிய துதித்திரட்டு. இதைத் தினந்தோறும் பல பக்தர்கள் பாராயணம் செய்து வருகின்றனர்.

## பசு-லக்ஷ்மியின் விமுக்தி(18-6-1948)

தமது அன்னைக்கருளியது போலவே தம்மிடம் பேரன்பு பூண்டிருந்த பசு லக்ஷ்மிக்கும் அதன் உயிர் ஒடுங்கிக்கொண்டிருக்கையில் பரிச நயன இதய தீக்ஷைகளை அருளியதோடு பாக்கியமிக்க அப்பசுவின் விமுக்தியைப்பற்றி

சருவதா ரிப்பேர்கொள்சம்வச் சரத்து
வருமானியைந்துசனாவாரம்மருவுமுற்
பக்கத் துவாதசிவி சாகசம் பசுவாமி
லக்குமி முக்தநாளாம்.

(ஸர்வாரி வருடம் ஆனி மாதம் ஐந்தாம் நாள் வெள்ளிக்கிழமை வளர்பிறை துவாதசியும் விசாக நட்சத்திரமும் கூடியது. பசு லக்சுமி விமுக்தி பெற்ற தினம்)

என்னுமோர் வெண்பாவையும் ஸ்ரீ பகவான் இயற்றியருளினார். பசு லக்சுமி ஆச்சிரம எல்லையிலே பகவானது மேற்பார்வையில் முறைப்படி அடக்கஞ் செய்யப் பெற்றது.

(இன்னும் வரும்.....)

# MARKANDAN & CO

## SOLICITORS

**Empowered to Administer Oaths**

## M. MARKANDAN. LLB

720 ROMFORD ROAD
MANORPARK
LONDON
E12 6BT

TEL
0208 514 8188
FAX
0208 514 8303

All aspects of immigration matters from appeals to European court of human rights
All types of conveyancing
Litigation
All courts civil/criminal
Landlords/Tenant matters
Matrimonial
Police station advice
All D.S.S and housing benefit matters

LEGAL AID

# Rani Fashions

ஈ ஸ்ட்காமில் தமிழர்களின் மாபெரும் புடவைக் களஞ்சியம்

## Specialist in Wedding sarees, Suites, Children Wears



எங்களிடம் திருமணத்திற்கான சிறந்த கூறைச் சேலைகள் காஞ்சிபுரம், அபூர்வா, றங்கோலி, கோலம் மற்றும் பலரக சாறிகள் கிளவுஸ் துணிகள் சுடிதார் குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் **immitation Jewelleries Ect.** நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளப்படும்.

**302 High Street North, Manor Park,**
**London E12 6SA**
**Tel: 0208 472 9970 Mobile: 0958 504 118**

# இல்லாதது தோன்றாது உள்ளது அழியாது

விஞ்ஞான மேதை ஐன்ஸ்ரின் கூறிய சைவசித்தாந்த உண்மைகள்.

நவீன விஞ்ஞான மேதையான பௌதீக பேராசிரியர் கலாநிதி ஐன்ஸ்ரின் அவர்கள் நான் காணும் உலகம் என்னும் ஆய்வு நூலில் பல தத்துவ ஞான உண்மைகளைத் தந்துள்ளார். அவை சைவசித்தாந்த உண்மை விளக்கத்துடன் பொருந்துவதாகப் புலப்படுகின்றன.

***சத்தியின் பெருக்கம் சடமும், சடத்தின் பெருக்கம் சத்தியுமாகும்.*** என்னும் உண்மை சைவ சித்தாந்தத்துடன் மிகவும் இசைந்துள்ளது. சத்காரியவாதம் சுத்த மாயையில் இருந்து ஆரம்பிக்கின்றது. அது மன இந்திரியங்களுக்குப் புலப்படாத நுண்ணியதாகும். அச் சத்தியின் பெருக்கமே சட உலகமாகக் காட்சியளிக்கிறது.

இக்காட்சி ஒரு வெறும் தோற்றமேயன்றி உண்மையல்ல. மெய்யாக உள்ளது. இறை அருளுடன் கூடிய சுத்த மாயையின் சத்தியேயாகும். சிவனுடைய முத்தொழில்கள், தோன்றுவதும் நிலைபரப்பதுவும் மறைத்தல் போலவும் பலப்படுகிறது. சட உலகமென நிரந்தரமான பொருள் எதுவுமில்லை. இதை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவாகமங்கள் வெளியிட்டுள்ளன. ***அத்தன் அருளின் விளையாட்டிடம் சடம் என்பது திருமந்திரம்.*** பேராசிரியர் ஐன்ஸ்ரின் கொள்கைக்கும் சத்கரிய வாதத்துக்கும் உள்ள ஒற்றுமையை மேலும் விரிவாகப் புரிந்து கொள்வோம். இல்லாதது தோன்றாது: உள்ளது அழியாதென்பது சத்காரிய வாதம். இதிலிருந்து அளவை இலக்கணப் பிரகாரம் நாம் அனுமானிக்கக் கூடியது யாதெனின், சக்திதான் உள்ளதென்பதும் சடப்பொருள்கள் ஒரு போலித் தோற்றம் என்பதுமாகும். மாயையைப் பொய்யெனப் புறக்கணிப்பது சைவசித்தாந்தமல்ல. சடசக்தியைப் பொய்யெனக் கழிப்பது விஞ்ஞானமல்ல. இவ்விடத்தில் சைவ மெய்ஞ்ஞானமும் பௌதீக விஞ்ஞானமும் ஒருமித்துப் பரிணமிப்பதை உணர்ந்து உவகை கொள்கின்றோம்.

விஞ்ஞான ஆய்வு முறைப்படி புதியனவற்றைக் கண்டுபிடித்தல் எப்படி? என்பதை விளக்கும் ஐன்ஸ்ரின் கூற்றைக் கவனியுங்கள். ***விஞ்ஞான ஆய்வுக்கு உந்து கோலாகவும், பிரதான பொறியாகவும் உள்ளது பரகாச அனுபவமாகும். அளவு கடந்த நிகரற்ற சக்தியைப் பணிந்து பாராட்டுவதிலேயே எனது சமயம் தங்கியுள்ளது. கடவுளைப் பற்றிய எனது கொள்கையானது புரிந்து கொள்ள இயலாத இந்த உலகில் பரிணமித்து விளங்கும் விமர்சன சக்தியின் சிறு விபரங்களிலும் கூட நான் கொண்ட நம்பிக்கையேயாகும்.***

இங்கே ஐன்ஸ்ரின் குறிப்பிடும் பரகாச அனுபவம் சுட்டறிவுக்கு அப்பாற்பட்டதாகும். வியாபக அறிவுக்கு உட்பட்டதாகும். சுட்டறிவினால் மனதுக்குப் புதிதான பூரணமான சக்தியத்தைக் கண்டுபிடிக்க இயலாதென்பது சிவஞான விளக்கமாகும். இங்கு சிவஞானமும் விஞ்ஞானமும் சந்திப்பதைக் கண்டுகளிக்கின்றோம்.

மேற்கொண்டு ஐன்ஸ்ரின் கண்டு பிடித்த சார்புக் கொள்கையைப்பற்றிச் சைவ சித்தாந்த அணுகு முறையில் நோக்குவோம். எந்த ஒரு புலப்பபாட்டையும் சார்ந்து பாராது அதற்கு அப்பாலுள்ள நடுவு நிலையில் இருந்து உள்ளதை உள்ளவாறே விழிப்புணர்வுடன் அவதானித்தாலே அதன் உண்மை புலப்படும் என்பது சைவ சித்தாந்தத்துணிபாகும். ஐன்ஸ்ரின் அவர்களும் இத்தகையதோர் அணுகு முறையைக் கொண்டே புதிய சார்புக் கொள்கையைக் கண்டு பிடித்தார்.

அணுவைப் பிளந்து அதனுள்ளிருக்கும் இயங்கியும் இயங்காதும் தோன்றும் சக்திகளைக் கூர்மையாகக் கவனித்தார். என்ன ஆச்சரியம்.? இயங்கும் சக்தியைக் கூர்மையாகக் கவனித்தார். அணு இயங்குவது போலத் தெரிகிறது. அதன் இயங்காத சக்தியைச் சார்ந்து நோக்கும் போது அது இயங்காதது போலப் புலப்படுகிறது. அது பார்க்கிறவனின் சார்புநிலைப் பார்வையில் தங்கியுள்ளதென்பதை உணர்ந்தார். சார்பு நிலையில்

அணு இயங்கியும் இயங்காதும் உள்ளதென்னும் உண்மை புரியுமெனப் பகன்றார்.

அத்துவிதமான சிவசக்தியைத் தியான தாரணை சமாதி மூலம் சார்பற்ற நிலையில் அவதானித்த சிவஞானிகள் மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்பே அது இயங்கும் பராசக்தியாகவும் இயங்காத பரம் பொருளாகவும் உள்ளதென்பதைக் கண்டுபிடித்தனர். இந்த உண்மையைக் காணும் நுண்ணிய சார்பற்ற அறிவைத் தெய்வீகத் திருவள்ளுவர் செம்பொருள் காணும்(செறிவு) அறிவென மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அத்துடன் நில்லாது, மனித சமுதாயம் அனுபவிக்கும் துக்கத்துக்குக் காரணம், மனிதனுடைய மனச்சார்பு நிலையாகும் என்பதை அறிவுறுத்தி, அதற்குரிய பரிகாரமாக,

***சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச் சார்தாரா சார்தரும் நோய்*** என உலகை நெறிப்படுத்துகிறார்

இதை ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தன் என்னும் மூன்று வயதுக்குழந்தையே ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பு கண்டு பிடித்துத் தனது தந்தைக்கு எடுத்துக்காட்டுவதாக அமைத்து உலகுக்கே விளம்பியது.

***அதோ அந்த அர்த்த நாரீஸ்வரச் சிலை இருக்கிறதே! அதைச் சார்பற்றுக் கவனியுங்கள். அப்பா! அதன் ஒருகாதில் தோடும், மறுகாதில் குண்டலமும் பொலிகிறதே. சிதாகாசத்தில் இயங்கும் பராசக்தியைத் தோடும், கயிலையில் இயங்காது உள்ள தட்சணா மூர்த்தியாகிய பரம்பொருளைக் குண்டலமும் உங்களுக்குப் புலப்படுத்தவில்லையா? சக்தியும் சிவமும் ஒன்றாக நின்றே எனக்கு ஞானப்பால் ஊட்டினார்கள்.***

இக் கருத்துப்பொலிவே தோடுடைய செவியன் எனும் தேவாரமாகும்.

பாதி இயங்கியும் பாதி இயங்காதும் உள்ள அற்புத அர்த்த(பாதி) நாரீஸ்வர உருவம் உலகுக்கே புதுமையானது. இதை உலகுக்கு ஈய்ந்த சைவ சித்தாந்தம் வாழ்க! இதனைச் சரிவர விளக்கும் விஞ்ஞானம் வெல்க.!

மக்களிடம் ஏற்படும் மெய்ஞ்ஞான போத மலர்ச்சியைச் சைவ சித்தாந்தம் தனியான பரிபாஷையில் சக்திநி பாதம் எனப்போற்றுகிறது.

இது மக்களுக்கு நிகழ வேண்டுமாயின் சுட்டறிவும் அதனால் விளையும் இருவினையும் முற்றாக அகலுதல்வேண்டும். பௌதிகச் சக்திச் சேமிப்புக் கோட்பாடு அற்புதமாக உள்ளது. இது சைவ சித்தாந்தத்திற்கு அரண் செய்வதாக அமைந்திருக்கிறது. அணுவானது தனக்கு தேவைப்படும் சக்தியைச் சுயமாகவே சேமித்துக்கொள்ளும் சுய ஆற்றலைப் பெற்றதாகும்.

அது போலவே உயிரனங்கள் யாவும் தமது விருத்திக்கும், இயக்கத்துக்கும் பரிணாமத்துக்கும் வேண்டிய சக்தியைச் சுயமாகவே பெறும் ஆற்றல் இயற்கையாகவே உடையனவாகும். உயிரின் முன்னேற்ற மாறுதலை விஞ்ஞானம் பரிணாமக் கிரமம் அல்லது கூர்ப்பு என விளம்பும். இத்தைகையதோர் அற்புதமான கூர்பபு அமைப்பு ஒரு கொம்பியூட்டர் முறையில் சுயமாகவே இயங்கக் கூடியதாக நியமிக்கப்பட்டுள்ளது. சிவனுடைய முத்தொழில்களாகிய படைத்தல், காத்தல், மறைத்தல் என்பன ஒரே இயக்கத்தின் தொடர் நாடகமேயன்றித் தனித்தனியான நிகழ்ச்சிகள் அல்ல. மனச் சார்புடையோருக்கு முத்தொழில் வெவ்வேறாகப் புலப்படும்.

மக்கள் பரிணாமக் கிரமத்தில் பகுத்தறிவு படைத்த மனித கட்டத்தை அடைந்துள்ளனர். இத்துடன் இயற்கைக் கூர்ப்பு முற்றுப் பெற்று விட்டதாக பகுத்தறிவாளர் கொக்கரித்துக் குழப்பம் செய்கின்றனர். இவர்களால் உலகம் அல்லோல கல்லேலப்படுகின்றது. இந்த இயற்கைப் பரிணாம நியதிப்படி பகுத்தறிவுக் கட்டத்தை அடைந்த மனிதன் இன்னுமொருபடி மேற்சென்று தெய்வீக நிலையடையவேண்டும் எனச் சிவஞானம் வழிகாட்டுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக உலகில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்தே திருமுருகனை ஏழு படிகளில் நிறுத்தி உருவம் அமைத்துத் தமிழ் கூறும் நல்லுலகம் உயர் நெறி காட்டியுள்ளது. இது தமிழ் உலகின் தனிச் சிறப்பாகும். ஆறு அறிவைத் தாண்டிய மனிதனே திருமுருகனாகும். இன்றைய

விஞ்ஞானம் சார்புக் கொள்கையையும் சக்தி சேமிப்புக் கோட்பாட்டையும் ஒன்றிணைத்து வெற்றி காணப் பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. அது நிறைவேறும் காலத்தில் சைவசமயமே மெய்ச்சமயமென ஆணித்தரமாக விஞ்ஞான ரீதியில் மேலும் நிரூபிக்கப்டும். இயற்கைக் கோள்கள் இயங்கும் வெளி மண்டலம் ஆகாசம் என அழைக்கப்டுகின்றது. அணுக்கள் இயங்கும் வெளியை அணு ஆகாசமென்று வியாக்கி யானிக்கப்படுகின்றது. உயிரினம் உலாவும் வெளியை வளிமண்டலம் என விளம்புகின்றோம். வெளியில்லாத இடத்தில் சுதந்திரமான இயக்கம் இருத்தல் இயலாது. திசை வெளியில் கோள்கள் தங்கு தடையின்றிச் சுதந்திரமாக இயங்குவதற்குக் காரணம் அங்கு எவ்வித ஈர்ப்பு உரோஞ்சலும் எதிர்ப்புச்சக்தியும் இல்லாமையேயாகும். அணு மண்டல வெளியுள்ளும் தடைகள் ஏதுமின்மையால் அவைகள் சுதந்திரமாக இயங்குகின்றன. ஆனால் பரிணாமக் கிரமத்தில் படியேறி வந்த மனித மூளை மண்டலத்தின் போக்கு இந்த இயற்கை நியதிக்கு மாறாக அமைந்துள்ளதை சைவசித்தாந்த தத்துவ ஞானிகள் சரிவரத் தெளிந்தனர். இதற்குக் காரணம் மனித மன வெளியில் செய்ற்கையான ஈர்ப்பும் உரோஞ்சுதலும் பரிணாமக்கிரமதில் உருவாக்கியதை உணர்ந்தனர்.

இந்த ஈர்ப்புக்கும் உரோஞ்சுதலுக்கும் அடிப்படைக் காரணம் மனோவிகாரங்களாகும். இதை அறிவுறுத்தும் வகையில் அமைந்த சிவவாக்கியருடைய பாடல் இதோ

***மனவிகாரம் அற்றுநீர் மதித்திருக்க வல்லீரேல்***
***நினைவிலாத மணிவிளக்கு நித்தமாக நிலைத்திடும்***
***அனைவர் ஓதும் வேதமும் அகம்பிதற்ற வேணுமோ?***
***கனவு கண்டது உண்மை நீ தெளிந்ததே சிவாயமே!***

பண்டைத் தமிழன் படைத்த ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியப் பேரிலக்கண நூலில் இந்த மனோ விகாரங்களை எட்டாகப் பகுத்து மெய்ப்பாடெனக் கூறப்பட்டுள்ளது.

காமம், வெகுளி, மயக்கம், அச்சம், துக்கம், சந்தோஷம், பொறாமை, வெறுப்பு, ஆகியனவே எட்டு மனோவிகாரங்களாகும். இவற்றினால் தான் மனவெளி பாதிக்கப்பட்டுள்ளது.

அவை தம்மிடையே எதிர்பபுச் சக்திகளைக் கொண்டு ஈர்க்கப்பட்டும். உரோஞ்சப்பட்டும் வீசப்பட்டும் இயங்குவதால் இவற்றின் மூலம் உண்மை விளக்கமோ அமை தியான வாழ்க்கையோ பெற முடியாதென்பது மெய்ஞ்ஞானத் துணிபாகும்.

மனோ விகாரங்களை அகற்றி, மனித னுடைய உண்மை விளக்க ஆற்றலைச் சுயமாகவே மலரச் செய்யும் கல்வி, முறையே சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் ஔடதம் என்பதில் ஐயமில்லை. அறிவு ஞானத்தை விடத் தெளிவு ஞானமே கோடி சிறந்ததாகும்.

நாம் கண்டு உணர்ந்து அனுமானித்துத் தெளியக்கூடிய பொருள் மூன்று உள்ளதாகச் சைவ தத்துவ ஞானம் பகுத்துக் காட்டுகின்றது. இவைகளில் மூலக்கூறு சக்தி யென்பதை மறுப்பதற்கில்லை. இவற்றை அறிவில்லாத பொருளென்றும், அறிவுடைய பொருளென்றும், தெளிவுடைய பொருளென்றும் கூறலாம். இன்னொரு வகையில் இவற்றை உருவப்பொருள் என்றும் அருவுருவப்பொருள் என்றும், அருவப்பொருள் என்றும் அழைக்கலாம். இவற்றுள் அறிவில்லாத பொருள் மாயையாகும். அறிவுடைய பொருள் ஆத்மாவாகும், தெளிவுடைய பொருள் சிவமாகும். இம்முப் பொருள் உண்மை எமக்குப் போதிக்கும் பாடம் என்ன? அதுவே மக்கள், தெளிவு ஞானம் பெறுதற்கு மிக முக்கியமானதாகும். அறிவில்லாத பொருளால் அறிவைப் பெறுதல் முடியாது. ஆனால் அறிவுடைப் பொருளால் தெளிவைப் பெறுதல் இயலும் என்பதே சிஞானபோத விளக்கமாகும். அறிவு தெளிவை மயக்குவதாதலின், அறிவையும் தெளிவையும் ஒரே சமயத்தில் எவராலும் பெறுதல் அரிதாகும்.

மனித அறிவின் முடிபிலே தான் தெளிவு மலரும் என்பது ஒரு அற்புதமான நியதியாகும். இதற்கு அமையவே சிவஞான மாளிகை கண் கொள்ளாக் காட்சியளிக்கிறது. இக் காட்சியே சிவதரிசனமாகிய தத்துவ ஞானமாகும். இதைப்

பெறுதலே எமது நற்சாதனையாகட்டும். மனச் சார்பு நீங்கின் சார்தரா எம் நோய் துன்பமும் நீங்கும்.

முடிவில் பேராசிரியர் ஐன்ஸ்ரின் அவர்களுடைய பொன்னான போதனை ஒன்றை நினைவு கூர்கின்றோம். எந்த அளவிலும் கருத்திலும் மனிதன் மமதையிலிருந்து விடுதலை பெற்றுள்ளான் என்பதைக் கொண்டே அவனுடைய பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகிறது. அதாவது மனித ஆளுமையின் காக்காப் பொன் தோற்றம் உருக்குலைதல் வேண்டும்.

அப்பொழுதுதான் ஆத்மாவின் சொரூபம் புலப்படும். இந்தப் போலி முகமூடி உருக்குலையும் போது தான் மனிதனால் அகங்காரமற்ற பூரணமான புரட்சி ஒளியின் பிராந்தியத்தை அணுக இயலும்.

## ஆகாரம் புசிக்கும் பொழுது

ஆகாரம் புசிக்கும் பொழுது எண்ணத்தைப் பல நிலைகளுக்குச் செலுத்தி, அதி ஆசையை அவ்வாகாரத்தில் செலுத்தி, ஆகாரத்தை உண்ணாமல், நாம் உணவு உண்ணும்போது தெய்வத்தின்பால் எண்ணத்தைச் செலுத்திச் சாந்தமான முறையில் உண்ணுவதற்கு முதலிலேயே ஒரு நிமிடம் அத் தெய்வத்தொடர்புடன் **ஓம் ஈஸ்வரா** என்ற எண்ணத்தில், உண்ணும் உணவின் சுவை உமதாக்கு என்ற எண்ணத்தில், ஆகாரத்தில் குறைவும் நிறைவும் இருந்தாலும், எண்ணத்தில் சாந்த உணர்வுடன் அவ்வாகாரத்தைக் கையிலெடுத்துச் சூரியனை அந்த உணவில் தியானித்து, இந்த உணவு என்னுள்ளே சென்று அமிர்தமாக என் உடலில் சேர்ந்து என் ஆத்ம சக்தி கூடட்டும் என்று எண்ணிக் கையிலெடுத்த உணவை இலையிலுள்ள உணவுடன் கலந்து பிறகு சாப்பிடவும்.

# வருந்துவதின்றி வேறறியோம்!



ஒருநாள்,
பூமிமேலேயும் வானம் கீழேயும் மாறின
கிழக்கே உதித்த சூரியன் மேற்கே
உதித்தான்
கண்ணைமூடிக்கொண்டு மனிதர்கள்
நடந்தனர்
பகலில் சந்திரன் தண்ணொளி
பரப்பினான்
இரவில் சூரியன் வெய்யொளி பரப்பினான்.
எல்லாமே அங்கும் இங்கும்
மாறிவிட்டன.
ஏன்? யாருக்கும் எதுவும் புரியவில்லை
அப்போ,
மனோகரி அம்மாவின் ஆத்மா
இறைவனின் பாதம்நோக்கிப்
பறந்து கொண்டிருந்தது.
நாங்கள் அழத்தொடங்கினோம்!
அழுகையை நிறுத்த யார்வருவார்?
இறைவா எங்கள் குருக்களுக்குமா
கர்மவிதியின் அமுலாக்கம்!
உன்னுடைய நீதிமன்றத்தில்
விதிவிலக்கு இல்லையா இறைவா!
அலுத்துப்போனேன் இறைவா
உன்னைப் புரிய முயன்று
ஓ! தோற்றுப்போனேன்!
**–மு. நற்குணதயாளன்–**

# சபரிமலையில் ஒரு சத்திய தெய்வம்

துன்னையூர்ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்

பாரதத் திருநாட்டின் இயற்கை வளம் நிறைந்த கேரளத்திலே சபரிமலை என்னும் இடத்தில் சானித்தியம் கொண்டு தன்னை நாடிவரும் பக்தர்களுக்குச் சரணம் தந்து காத்திடும் அற்புத தெய்வம் ஸ்ரீ ஐயப்பன். அருள் தந்து காத்திடும் விரத நாள் மகர ஜோதி பெரு விழா கார்த்திகை மாதம் தொடக்கம், தைப் பொங்கல் வரை யான நாட்களில் ஐயப்ப பக்தர்கள் மனம் ஒன்றி ஐயனை வேண்டி நிற்கும் திருநாட்க ளாகும். கார்த்திகை மாதம் பிறந்து விட்டாற் போதும் உலகெங்கும் உள்ள ஐயன் அடியார்கள், கறுப்பு, நீலம் காவி நிறம், என உடைகள் அணிந்து கழுத்தில் மாலை அணிந்து சாமியே சரணம் ஐயப்பா என்ற கோசத்தோடு ஐயப்பன் பஜனைகளும், நாம கீர்த்தனங்களும் செய்து, இறை இன்பத்தில் திளைப்பர்.



முன்பு கேரள மாநிலத்தில் மட்டுமே ஐயப்ப வழிபாடு முதன்மை பெற்று விளங்கியது. அதன் பின் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமாக இந்த ஐயப்ப வழிபாடு பரந்து தற்போது இலங்கை, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, என எம் தமிழ் மக்கள் பரந்து வாழும் எல்லா நாடுகளிலும் ஸ்ரீ ஐயப்ப வழிபாடு மேலோங்கிப் பரந்து வாழும் பல நாட்டு பக்தர்களும், சபரிமலை யாத்திரை செய்து ஐயனைக் காணவரும் காட்சி, மிக அற்புதமானது. இதற்கு மிக முக்கிய காரணம் அந்த ஐயப்ப சுவாமியின் திருவருட் சிறப்பேயாகும். சிறியவன், பெரியவன் என்ற பேதமின்றி இருமுடி கட்டி தலையில் வைத்துக் கல்லையும் முள்ளையும், காலுக்கு மெத்தையாக்கி ஐயனை மனதில் நினைந்து, ஆரியங்காவு, குளத்துப்புழை, பந்தளம், எருமேலி, பேரூர்தோடு, காளைகட்டி, அழுதை, கல்விடும் குன்று, இஞ்சிப்பாறைக் கோட்டை, கரிவலந்தோடு, கரிமலை, பெரியானை வட்டம், சிறியானை வட்டம், பம்பை, நீலிமலை, அப்பாச்சிமேடு, இப்பாச்சிக்குழி, சபரிபீடம், சரங்குத்தி ஆல், போன்ற மலைப்பாதை வழியே ஐயன் நாம சரணம் சொல்லி நடை நடந்து, சன்னிதானத்திலே சத்தியமான பதினெட்டாம் படிகளில் ஏறி அந்த சபரிவாசனின் திரு உருவ காருண்ய அழகை காணும் போது உண்மையிலேயே நாம் பட்டகஷ்டங்கள் எல்லாம் மறந்து விடுவோம். இது சபரிமலை யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்களின் அபூர்வமான உண்மை யாகும். கருவறையிலே ஐயன் அமர்ந்திருக்கும் எழிற்கோலம் பார்ப்பவரை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும். முறுவல் பூத்த லாவண்ய முகமும், இரண்டு கால்களையும் மடக்கிய நிலையில் முழந்தாலில் கட்டு போட்ட யோக அமர்வும் ஒருகை தன்னைச் சரணடைவோரை என்றும் காத்தருள்வேன் எனப் பாதத்தைக் காண்பிக்க மறுகரம் சின்முத்திரை காட்டிய நிலை – சின்முத்திரையில் தாய்விரல் பரமாத்மாவையும், சுட்டுவிரல் ஜீவாத்மாவையும், நடுவிரல் ஆணவ மலத்தையும், மோதிரவிரல் கன்ம மலத்தையும், சிறுவிரல் மாயை என்கின்ற மலத்தையும் குறிப்பதாகும். மும்மலங்களையும் விடுத்து மனிதன் இறையைச் சரணடையவேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டும் நிலையில் ஸ்ரீஐயப்பசுவாமி வீற்றிருந்து கருணையருள் தருகின்றார். அதிலும் ஐயனின் நெய் அபிஷேகக்

காட்சி, புஷ்ப அலங்காரக் காட்சி, ஆபரண அலங்காரக் காட்சி என்பன மனதில் பரவசத்தை ஏற்படுத்தும் அற்புதக் காட்சிகளாகும்.

ஆலயம் சூழ்ந்து மலைகள் காவல் புரியவும் வாயு பகவான், தென்றல் காற்றாய் ஆலய சூழலில் சாமரம் வீச பூங்குயில்கள் கூவிட, பிரபல பாடகர் சங்கீத பூஷணம் பத்மஸ்ரீ கே. யே. ஜேசுதாசின் ஸ்ரீ ஐயப்ப சுப்பிரபாதம் ஒலிபெருக்கி மூலம் காதில் ரீங்காரமிட காலைப் பொழுதானது, ஐயப்ப சன்னிதானத்திலே அற்புதப்பொழுதாய் மலர்கின்றது. அதிலும் தற்போது ஐயப்ப சன்னிதான மூலஸ்தான மேல் கோபுர தகடுகள், மற்றும் பிரகாரம் சுற்றிய சித்திர வேலைப்பாடுகள், யாவும் தங்க தகட்டு வேலைப்பாடுகளுடன் திகழ்வது பார்ப்போரைப் பரவசப்படுத்தும் அமைப்பாய் உள்ளது. மற்றைய விரதங்களில் இருந்து மாறுபட்டுச் சற்றுக் கடினமாகவே ஐயனோடு எம் மனநிலையை ஒன்ற வைக்கும் அற்புத விரதம் கார்த்திகை மாத ஐயப்ப மண்டல விரதம், மற்றவர்கள் சபரிமலை செல்கிறார்களே நாமும் செல்வோம் என நினைப்பதும், இந்த விரதத்தைச் சாதாரண விரதமாக நினைந்து, நடப்பதையும் தவிர்த்து, உண்மையான உள்ளன்போடும் விரதக் கட்டுப்பாட்டோடும் செல்வோர்க்கு அந்த ஐயன் சரண் தந்து காப்பான் என்பதில் ஐயம் இல்லை. இலங்கைத் தலை நகர் கொழும்பில் ஐயப்ப வழிபாடு மிக நிறைந்து காணப்படுகின்றது. கொழும்பு 15ல் அகில இலங்கை ஐயப்ப தேவஸ்தானம், கொள்ளுப்பிட்டியில் 9ம் மாடியுறை ஐயப்பன் சன்னிதானம் சபரிமலை சாஸ்தாபீட ஐயப்பன் கோயில், கொழும்பு 13 வெக்காளி அம்மன் கோயில், கொழும்பு வான்றோயன் வீதி ஐயப்பன், வெள்ளவத்தை மயூரபதி ஐயப்பன் என பல்லாயிரக்கணக்கான ஐயப்பன் அடியார்கள் விரத மண்டல மாலை அணிந்து சபரிமலை யாத்திரையை வருடாவருடம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்தொன்றாகும். அகிலம் பூராவும் ஐயன் அருள் சுரக்க கலசம் மூலம் நாமும் பிரார்த்திப்போமாக.

# ஆலயங்களுக்குச் செல்லும் பொழுது

ஆலயங்களுக்கு நாம் செல்வது தெய்வத்தின் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால் நம் வாழ்க்கை நிறைவு பெற முடியுமென்று சொல்லுகின்றோம். ஆனால் இன்றைய ஆலய வழிபாட்டில் மனித உணர்வின் எண்ணம் பூஜையில் ஏற்படக்கூடிய சகுனத் தடையில் அதிநாட்டமும், சிலைக்குச் செய்யப்படும் அபிஷேக ஆராதனையில் நடக்கும் அவரவர் வசதிக்கொப்பச் செய்யப்படும். அங்கு அளிக்கப்படும் வழிவகுத்துத் தந்துள்ள கட்டண வழி நிலையிலும் லயிக்கின்றது. பொருளைக் கொண்டு தெய்வ சக்தியின் தொடர்பு நமக்கு ஏற்படுகின்றது என்ற எண்ணத்தில் மனிதனின் மனம் அமிழ்ந்து விடுகின்றது. இதைமாற்றி, ஒவ்வொரு வரும் இனி ஆலயத்திற்குச் சென்றால் இவ்வெண்ணத்தை நறுமணமாக்கி, உணர்வைச் சாந்தமென்ற பாலாக்கி, தேனான சுவை கொண்ட எண்ண ஆசையில் தெய்வசக்தி பெறுவோம். தெய்வ சக்தி பெற்றவர்களின் தொடர்பு கொண்டு நாமும் தெய்வ நிலை கொண்டு, ஒவ்வொரு இல்லத்தையும் கோயிலாக்கி வாழ வழி பெற்று வருவோமென்ற எண்ணத்தில், ஆலயங் களில் மகான்கள் விட்டுச் சென்ற, பதித்துள்ள உண்மை நற்குண வழித்தொடரை ஆலயத்தில் கூட்ட மில்லா இடங்களில் சிறிது நேரம் நாம் அமர்ந்து எத்தெய்வத்தை வணங்க நாம் சென்றோமோ அத்தெய்வத்தின் பால் எண்ணத்தைச் செலுத்தி, நம் உணர்வில் அவர்கள் பெற்ற ஒளிச்சக்தியின் உன்னத வலுவை நாமும் பெற்றுவர வேண்டும்.

# மனிதனும் ஒளிவழிபாடும்.

## தனபாக்கியம் குணபாலசிங்கம்

நாம் வாழும் பூமியில் சிந்தனா சக்தி நிறைந்த தற்கால மனிதன் மூன்று கோடி வருடங்களுக்கு முன்னரே தோன்றி விட்டான் என்பதனை எத்தியோப்பியாவில் கிடைக்கப்பெற்ற தடயங்கள் உறுதிசெய்துள்ளன. அதற்கு முன் எவ்வளவுகாலம் முதலாக மனிதன் பூமியில் வாழ்ந்து வருகின்றான் என்று அறியக்கூடிய ஆதாரங்கள் தற்பொழுது இல்லாவிடினும், இந்து சாத்திரநூல்கள் கூறுகின்ற யுகம், சதுர்யுகம், மன்வந்தரம், கல்பம் முதலான கால அளவுகளில் உண்மைகள் உண்டென்பதனை இவை புலப்படுத்துகின்றன. இவ்வாறு நம் கற்பனைக்கெட்டாத பல்வேறு யுகங்களில் வாழ்ந்த மனிதன் தன் அன்றாட வாழ்வின் இயக்கத்திற்குச் சூரியன், சந்திரன், தீ முதலான ஒளிகள் மிகமிக அவசியமானவை என்று உணர்ந்திருந்தான். அதனால் ஒளி வழிபாட்டினைத் தன் தெய்வீக வழிபாட்டில் ஓரங்கமாக ஏற்றுக்கொண்டான். இவ்வாறு இறைவனின் கருணையைப் போற்றுவதே ஒளி வழிபாடாக மிளிரலாயிற்று. அதனால் ஒளி வழிபாடு என்பது மனிதன் உருவாக்கிய எல்லா மதங்களுக்கும் பொதுமையான தொன்றாக விளங்குகின்றது.

இந்துக்களின் வேதமாகிய இருக்கு வேதத்தின் முதல் பாடல், தீயை விழித்துத், தமது யாகங்களின் ஆகுதிகளை தேவர்களுக்கு எடுத்துச்செல்லும் புரோஹிதனாகப் போற்றுகின்றது. பழைமை மிக்க பாரசீகரின் சொராஸ்டிர மதமும் தீ வழிபாட்டினையே மதத்தின் முக்கிய அம்சமாகக் கொண்டுள்ளது. இந்து தத்துவ நூலாகிய சாந்தோக்கிய உபநிடதம் சிருஷ்டி பற்றி விபரிக்கையில் இரண்டற்றதும் ஒன்றானதுமான பிரம்மம் நான் பலவாக ஆவேன், வெகுவாக வளர்வேன் என்று கருதி, அது ஒளி யைச் சிருஷ்டித்தது(6:2.3)எனச் சிருஷ்டியில் ஒளியையே முதன்மைப் படுத்துகிறது.

விவிலியவேதம் உலகப்டைப்பைப் பற்றி விபரிக்கையில் கர்த்தர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபின் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சத்திற்கு பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெய ரிட்டார். சாயங்காலமும், விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.(ஆதியாகமம் அதி1–3–5) என இறைவன் பூமியை ஒளிமயப்படுத்திய வரலாற்றைக் கூறும். அதனோடு கர்த்தர் பல சந்தர்ப்பங்களில் தன் தூதர் மூலம் தீவடிவில் காட்சி கொடுத்ததாகவும் கூறுகின்றது. மோசே ஆடுகளை மேய்த்திருக்கையில் கர்த்தரின் தூதரானவர் ஒரு முட்செடியின் நடுவில் தீப்பிழம்பு வடிவில் அவனுக்குத் தரிசனமானார். அதனைக் கண்ட மோசே முட்செடியில் சுடர் எரிந்தும் அது வெந்து போகாததை அவதானித்தான். அவ் அற்புதத்தைப் பார்க்க விரும்பி மோசே முட்செடியினருகில் சென்றான். அப்பொழுது முட்செடியிலிருந்த தேவன் அவனை மோசே! மோசே! என்று கூப்பிட்டார். (யாத்திராகமம்:3:1–4) இன்னோர் சந்தர்ப்பத்தில் கர்த்தர் சீனாய் மலையில் மேல் தீயில் இறங்கிய படியால் அது முழுதும் புகைக்காடாக இருந்தது.(யாத்திராகமம்19–18) இவ்வெடுத்துக்காட்டுக்கள் யாவும் கர்த்தர் ஒளி வடிவினன் என்பதனை விவிலிய வேதம் எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்.

சைவர்கள் சிவனைத் தீப்பிழம்பு வடிவினனாகவே வழிபடுவார்கள். தன்னைத் தேடிய திருமாலுக்கும், நான்முகனுக்கும் சிவன் தீப்பிழம்பாகி அடி முடி காணாது நின்ற தலம் திருவண்ணாமலை ஆகும். இது தவிர காசி கேதார்நாத், முதலான பன்னிரண்டு தலங்களில் சிவன் சோதி வடிவில் பக்கதர்களுக்குக் காட்சியளித்து எழுந்தருளின தலங்களாகப் போற்றப்படுகின்றன. திருமூலர் ***மாலை விளக்கும் மதியமும் ஞாயிறுஞ் சாலை விளக்குந் தனிச்சுடர் அண்ணலுள்***

***ஞானம் விளக்கிய நாதன் என் உள் புகுந்து***
***ஊனை விளக்கி யுடனிருந்தானே***

என்றும்

மாணிக்கவாசகர்

................................ ***நாடொறும் அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு***
***மதியிற் றண்மை வைத்தோன் திருத்தகு***
***தீயின் வெம்மை செய்தோன் (திருவாசகம் திருவண்டப்பகுதி)***

என்றும் இறைவன் சூரியன், சந்திரன், தீ வடிவங்களாகி உலகை இயக்குவதைப் போற்றுவர். பின்னர் மாணிக்கவாசகர்,

***ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி***
***சோதியே சுடரே சூழொளி விளக்கே*** என்று பக்தி பரவசமான நிலையில் சிவனை ஒளி வடிவிலே போற்றி வழிபடலாயினர். திரு மாளிகைத்தேவர் ஒளி வளர் விளக்கே உவப்பிலா ஒன்றே என்றும் வள்ளலார் அருட் பெருஞ்சோதி அபயம் அபயம் என்றும் சிவனைச் சோதி வடிவிலே வழிபட்டனர்.

மேலும் சாந்தோக்கிய உபநிடதம் இறைவன் ஒளிவடிவினன் என்பதனை இந்த ஒளி உலகத்திற்கு மேலாக ஒரு சுயஒளி பிரகாசிக்கின்றது.அது சூழ்ந்துள்ள உலகு அனைத்தையும் தன் கீழ்க்கொண்டு ஒப்புயர்வற்றதான உத்தம உலகில் பிரகாசிக்கின்றது. இந்தப் புருஷனிடம் உள்ளொளி எதுவோ அதுவும் இதுவேயாம்.(3:13:7) எனக்கூறும்.

மேலும் பிருஹதாருண்ய உபநிடதம் கால வடிவான பிரபஞ்சம் பகல்களுடன் எவனுக்குக் கீழ்ப்பட்டுச் சுழல்கின்றதோ அந்த ஒளிக்கு ஒளியான பரமாத்மாவை ஆயுளாகவும் அமிருதமாகவும் தேவர்கள் உபாசிக்கின்றனர்(4:4:16) என்றும் இறையொளியின் பெருமையைப் போற்றும்.

இவ்வாறு சூரியன், சந்திரன் ஆகிய ஒளிக–ளில் இறைவனின் அருளைக் கருணையைக் கண்டதனாலே ஒளி வழிபாடு மனித வாழ்வின் ஓரங்கமாயிற்று. சங்ககாலத் தமிழகத்தில் சூரியக் கோட்டம், சந்திரக்கோட்டம் என வழிபாட்டுத் தலங்கள் இருந்துள்ளன. இளங்கோவடிகளும் ஞயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும் என்று சூரியனின் தெய்வீகத்தைப் போற்றினர். சைவர்கள் சூரியனைச் சிவனின் வலக்கண் என்றும் சந்திரனை இடது கண் எனவும் கருதுவர். சூரிய ஒளி வழிபடுமிடமெல்லாம் புல் பூண்டு முதலான சகல உயிரினங்களும் உயிர்ப்படைகின்றன. அதனால் சூரியனே உயிரினங்களின் இயக்கத்திற்கு ஆதாரமாம். சூரியனில்லையேல் பிரபஞ்சமனைத்தும் இருள் கவ்வி உயிரினங்கள் வாழமுடியாது. என்பது மனிதனின் அன்றாட அனுபவமாகும்.

இத்தகைய உயிர் நாடியான சூரியனுக்கு நிகழ்த்தும் வழிபாடே காயத்திரி வழிபாடாகும். காயத்திரி மந்திரத்தில் சூரியனின் பெருமை பின்வருமாறு போற்றப்படுகின்றது.

ஓம் பூ: புவ:ஸ்வ: தத்சவித்ரு வரோண்யம்,பர்க்கோ தேவஸ்ய தீமஹி: தீயோ யோ ந: பிரசோதயாத், (OumBhoor bhuvah svah tat savitur varenyam; Bhargo devasya Dheemahee Dhiyo yo nah pracho-dayat)

இதன் பொருள் பூமி, புவனம், சுவர்க்கம் ஆகிய மூவுலகிலும் சூரியனே மேலானவன். அனைத்தையும் படைக்கும் அந்த பகவானின் சோதி வடிவைத் தியானிக்கினறேன். அந்த பகவான் எமது அறிவினை ஒளிமயப்படுத்துவானாக என்பதாகும். காயத்திரி வழிபாடு சிறப்பாகக் கலையில் சூரியன் அடிவானத்தை நெருங்கும்போது நிகழ்த்தப்படுவதாகும்

காலைப் பொழுதில் சூரியன் வருகையினால்தான் இருளில் தூங்கிக் கிடந்த உயிரினங்கள் யாவும் விழிப்புற்று மீண்டும் இயங்கத் தெடங்குகின்றன. இந்த இயக்கத்திற்குத் துணை புரியும் சூரியனை வழிபடுதலே காயத்திரி வழிபாடாகும். இனி சூரியன் மறைந்த பின் சந்திரன் தண்ணொளி வீசி இருளை அகற்றும். தீ மனிதனுக்கு இராப் பகலாகத் துணை நிற்கும். சூரியன் இயல்பும் பூமியில் வளர்க்கப்படுகின்ற தீயின் இயல்பும் ஒன்றுதான். எனவே தீயின் செயற்பாடுகளையும் தெய்வகாரியமாகவே மனிதன் கருதினான். திருமூலர்

***விளக்கினை ஏற்றி வெளியை அறமின்***
***விளக்கினின் முன்னே வேதனை மாறும்***
***விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்***
***விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே***

என விளக்குச்சுடரில் எழுந்தருளியிருப்பவரும் இறைவனே என்று கூறியருளுவர். இதனாலன்றோ எல்லா மதங்களும் தீபங்களை ஏற்றி வழிபாடியற்றி வருகின்றன என்பதனை நாம் உணரலாம். யோகியர் தீபச்சுடரில் இறைவனை, இறைவனின் திருப்பாதங்களை ஊனக்கண்களால் கண்டனர். அதனாலே அருட்பிரகாச வள்ளலார் ஒளி வழிபாட்டினை யாவரும் செய்யவேண்டுமென்று அறிவுறுத்தினார். இன்னும் ஒரு படி மேலே போனால் ஊனுடம்பை ஒளி உடம்பாக்கலாம் என்றார். இதனையே திருநாவுக்கரசர் சுவாமிகளும்,

***உடம்பெனும் மனையை கத்து உள்ளமே தகளியாக***
***மடம்படும் உணர் நெய் அட்டி உயிரெனும் திரி மயக்கி***
***இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கிற்***
***கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே***

என இறைவன் தாள்களைத் தனக்குள்ளே காணலாம் என்றார். ஒவ்வொரு உயிரினுள்ளும் இறைவன் ஒளிவடிவில் உறைகின்றான். மனிதன் முயன்றால் தனக்குள்ளே காணமுடியும் என்பதனை திருமூலர் முதலான யோகிகள் அறிவுறுத்தியே வந்துள்ளனர். ஒருவனின் தியான வெப்பத்தினால் மூலாதாரத்தில் சுருண்டு படுத்திருக்கும் குண்டலினி சக்தியானது விழித்து (குண்டலினி சக்தி விழித்தெழுவது பற்றி ஔவையார் விநாயகர் அகவலில்,

குண்டலி அதனில் கூடிய அசைபை
விண்டெழுமந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழுகனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே

என்று கூறுவது மூலம் உணர்ந்து கொள்ளலாம்.) மேலெழுந்து சுழுமுனை நாடி வழியாகத் தலையின் உச்சியிலுள்ள ஆயிரமிதழ் தாமரையின் நடுவில் சுடர்விடும் இறையொளியுடன் ஒன்றாக மூழ்கிவிடும் பொழுது ஆன்ம தரிசனம் உண்டாகின்றது. அப்பொழுது யோகி முழுக்க முழுக்க உடல், உள்ளம் என்பனவற்றிலிருந்தும் பிரிந்து மரணமில்லாப் பெருவாழ்வை அடைகின்றான். இந்நிலையே, ஊன் உடலை ஒளி உடம்பாக்கலாம் என்று வள்ளலார் கூறினார். மேலும் இந்நிலையை பிருஹதாருணியக உபநிடதம் உண்டாயதற்கும் உண்டாகப் போவதற்கும் இறைவனாயும் ஒளிவடிவினனாயும் உள்ள ஆத்மாவை ஒருவன் எப்போது காண்கிறானோ அப்போது அவன் தனக்கு வேறான உடலின் பேணுதலை விரும்புவதில்லை.94:4:15) எனக்குறிப்பிடும்.

சூரியனை இறைவனாக உபாசித்து தியானித்திலாழ்ந்த முனிவர் ஒருவருக்குக் கிடைக்கப்பெற்ற அனுபவமாவது, பிரம்ம லோகத்தில் சூரியன் ஒரு போதும் மறைவதுமில்லை, உதிப்பதுமில்லை, என்பதாகும். (சாந்தோக்கிய உபநிடதம் இதனையே கீதையில் பகவான் கிருஷ்ணர்(11:2–3) ஆத்ம ஞானத்தால் எவர்களுடைய அகவிருள் அழிவுறுகிறதோ அவர்களுக்குப் பரம்பொருள் சூரியனைப் போல் விளங்குவது(கீ–5:16) என்றனர்.

விஞ்ஞானம் ஒளியின் இயக்கம் ஒரு நொடிக்கு ஒரு லட்சத்து எண்பத்தாறு மைல் வேகத்தில் செல்கிறது என்றும். ஒளியின் வேகம் ஒரு நொடிக்கு ஆயிரத்து நூறு அடி வேகத்தில் குறையும் போது அது ஒலியாக மாறும் என்றும், இன்னும் வேகம் குறைய காற்றாகவும், நீராகவும், நிலமாகவும் மாறும் என்கிறது. எனவே ஆன்ம ஞானத்தால் மட்டுமன்றி, விஞ்ஞானத்தாலும் பிரபஞ்சம் முழுவதும் ஒளியினால் தான் அமைக்கப்பட்டிருக்கின்றதென்பதனை மனிதன் உணர்ந்ததனாலே அவன் எங்கிருந்தாலும் ஒளி வழிபாட்டினைப் பொதுமையாகக் கொண்டிருக்கிறான் என்பது புலனாம்.

இனி அவதார புருஷர்கள் யோகிகள், ஞானிகள் ஒளி பற்றி என்ன கூறினார்கள் என்பதனை நோக்குவோம். பகவான் கிருஷ்ணன் சூரியன், சந்திரன் நெருப்பில் உள்ள ஒளியாவும் என தம்சத்தில் பிறந்தவை(கீ12:12)

சொராஸ்ர்ர்(Zoroaster) முடிவில்லாததற்கும் முடிவுடையதற்கும் குணப் பொருளுக்கும், பொருளுக்கும், படைத்தவனுக்கும் படைப்புக்குமிடையே இணைப்பாக அமைவது ஒளியே.

இயேசு நாதர் நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப் பின்பற்றுபவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியில் நடப்பான் (விவிலிய வேதம் யோவான்(8:12)

முகம்மது நபி
அல்லா ஒளியை நோக்கி நகர்பவனை ஒளியின் மீது ஒளியென வழிநடத்துவான். (குர்ஆன் 24:35)

கௌதம புத்தர்

அறிவு ஞானம் உயரொழுக்கங்கள் யாவும் பொருந்திய ஞானி வானத்துச் சந்திரனைப்போல் பிரகாசிப்பான்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா

ஒளியை நோக்கி நகர், உன் நிழல் பின்னால் விழட்டும். நீ ஒளியினின்றும் விலகினால் உன் நிழலையே பின்தொடர்வாய் அது போல் கடவுளை நோக்கி நகர நகர நிழலாகிய மாயை உன்னை விட்டு விலகிவிடும்.

எனவே மனிதன் ஆலயங்களிலும் வீடுகளிலும் ஏற்றி வழிபடுகின்ற ஒளியில் மிளிர்பவன் இறைவனேயன்றி வேறொன்றுமல்ல என்று அனுபவித்து உணர்வோமாக.

## சுற்றத்தாரைச் சந்திக்கும் பொழுது

வாழ்க்கைத் தொடரில் சுற்றத்தாரைச் சந்திக்கும் பொழுது அவர்கள் பெற்ற அலைத் தொடர்பை அவர்கள் உணர்வுடன் நம் எண்ணத்தின் உணர்வைச் செலுத்தாமல் நம் எண்ணத்தின் உயர்வு நிலை உயர்ந்த தெய்வ குணத்தொடர்புடனே சலிப்பு, கோபம், குரோதம், வஞ்சனை, காமம், வெறி போன்ற தீய உணர்வுகளுடன் செலுத்தாமல் எண்ணத்தைச் சாந்தமாக்கித் தீய உணர்வுகள் தோன்றும் காலத்தில் ஓம் ஈஸ்வரா என்ற ஒலியை எண்ணத்தில் கூட்டி, உணர்வைச் சாந்தாமாக்கி, உற்றார், சுற்றார், உறவில் பேசப்படும் சொல்லும் செயலும் உணர்வின் எண்ணத்தைப் பாதிக்காமல் இருக்க முதலில் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு கொழும்பில் கௌரவம்



தமிழுக்கும் சைவத்துக்கும் அயராத பணிபுரிந்துவரும் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு வி. நாகரத்தினம் அவர்களும் திருமதி மதனா நாகரத்தினம் அவர்களும் சமீபத்தில் கொழும்பு சென்றிருந்தபோது 10-11-2000 வெள்ளிக்கிழமை அன்று அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் நக்கீரர் மணி மண்டபத்தில் திரு க. கனகசபாபதி ஜே.பி அவர்கள் தலைமையில் பாராட்டு வைபவம் நடைபெற்றது.

## வாசகர் கவனத்திற்கு

அன்புள்ள வாசகர்களே கலசத்துக்கு நீங்கள் அனுப்பும் ஆக்கங்களை உரிய காலத்தில் அனுப்பும் படி அன்போடு வேண்டுகின்றோம். அடுத்த இதழ் தமிழ்ப் புதுவருடப் பிறப்பிலன்று வெளிவருகின்றது. இதற்கான ஆக்கங்களை பங்குனி மாதம் 5ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்

ஆசிரியர்

# சிறுவர் கலசம்

வணக்கம்!

பெற்றார்களே! இளையவர்களே!

இந்தப்பகுதி எந்த அளவுக்கு உங்களுக்குப் பயன்படுகின்றது என்பதை அறிந்துகொள்ள அவாவுடையோம். உங்கள் அபிப்பிராயங்களை தயவுசெய்து அனுப்பி வைக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

## இது தான் தர்மமா?

இறைவனால் அருளப்பட்ட வேதங்கள் மனிதர்களுக்கு சேரவேண்டும் என்பதற்காக அதை நான்காக வகுத்தவர் வியாச முனிவர். மனிதர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட வேத வியாசர் ஐந்தாம் வேதம் என அழைக்கப்பட்ட மகாபாரதம் என்னும் இதிகாசத்தைப் பாடினார். படிக்கப் படிக்க இன்னும் படிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டுகின்ற மகாபாரதக் கதையில் தர்மம் அதர்மத்தின் நிலைகளை மனித வாழ்க்கை ஊடாக விளக்கி இருக்கின்றார்.

பாரதத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள் அதர்ம வழியில் நடந்திருக்கின்றன. ஆனால் யுத்த பருவத்தில் பதின்மூன்றாம் நாள் போரில் நடந்த அபிமன்யுவின் வதம் என்னைத் திடுக்கிட வைத்தது. இக்கதையை அமர் சித்திர தொடர் கதை புத்தகத்தில் வாசித்தேன். தொலைக்காட்சியில் படமாகப் பார்த்தேன். என் பெற்றோருடன் விமர்சித்தேன். என்னை திருப்திப் படுத்துவதற்காக பலவ-தேமான கருத்துக்களை என் பெற்றோர், முன் வைத்தனர்.

13ஆம் நாள் போரில் துரோணர் பத்ம வியூகத்தை அமைத்திருந்தார். வியூகத்தின் நடுவில் துரோணர் நின்றார். அவரை சுற்றி வர கர்ணன், துரியோதனன், கிருபாச்சாரியாயர், ஜெயத்திரதன், அஸ்வத்தாமா, போன்றோர் நின்றனர். அந்த நேரத்தில் சுசர்மன் போருக்கு வரும்படி அருச்சுனனைக் கூவி அழைத்தமையால் அருச்சுனன் அப்பால் சென்று விட்டான். துரோணரால் அமைக்கப்பட்ட பத்ம வியூகத்தை உடைக்க அபிமன்யுவுக்கு மட்டும்தான் தெரியும். அதுவும் வியூகத்தை உடைத்து அபிமன்யுவுக்கு உள்ளே நுழையத் தெரியுமே தவிர வெளியே வரத்தெரியாது. அதற்கு யுதிஷ்திரர் அபிமன்யுவை உள்ளே செல்லும்படியும் தாங்கள் பின்னால் வருவதாகவும் கூறினார். அபிமன்யு உள்ளே சென்றதும் ஜெயத்திரன், வியூகத்தை மூடி பாண்டவர்களை உள்ளே விடாமல் இடைமறித்து போராடினான். உள்ளே சென்ற அபிமன்யு கௌரவ சேனைகளை முறியடித்து துரோணரின் ஆற்றலையும் மீறி பத்ம வியூகத்தைப் பிளந்தேவிட்டான். கௌரவப் படை பயந்து நடுங்கியது. அபிமன்யுவின் வீரச் செயல்களை படிக்க படிக்க என் மெய் சிலிர்த்தது. பின் துரியோதனன், துச்சாதனன், துரோணர், அஸ்வத்தாமா, கர்ணன் சல்லியன், கிருதவர்மன், சகுனி போன்றோருடன் தனித்தனியாக போரிட்டு எல்லேரையும் பின் வாங்கச் செய்து இளஞ்சிங்கம் போல கர்ஜித்தான். அபிமன்யுவை கொல்ல முடியாத கௌரவப்படை, ஒன்று சேர்ந்து அவனைச் சூழ்ந்து நின்று போராடினார்கள். இந்த

இடத்தில் தான் தர்மம் நழுவுவது தெரிக–ின்றது. கௌரவப்படை ஒன்று சேர்ந்து தாக்கியபொழுது அபிமன்யுவின் தேரும் உடைந்து குதிரைகளும் இறந்தன. அந்த நியைிலும் கூட போர் ஆயுதங்களான கத்தி கேடயத்துடன் போர் செய்தான். துரோணரும், கர்ணனும் அவ்வாயுதங்களைத் தூள் தூள் ஆக்கினர். உடனே தனது தேர்க் கால் சக்கரத்தை தூக்கி போராடினான். அதனை அபிமன்யு வீசி இருந்தால் கிருஷ்ணரின் சக்கரம் போல எல்லோரையும் கொல்லக்கூடிய சக்தி வாய்ந்தது என்பதால் அச்சக்கரத்தையும் எதிரிகள் பொடிப் பொடியாக்கினர். அந்நிலையிலும் கதாயுதத்தை எடுத்து அஸ்வத்தாமாவை தாக்கினான். அஸ்வத்தாமா பின்நோக்கி ஓடினான். அந்த நேரத்தில் துச்சாதனின் மகன் அபிமன்யுவுடன் கதாயுதத்துடன் போர் செய்தான். இருவரும் கீழே விழுந்தனர். துச்சாதனனின் மகன் உடனே எழுந்து விட்டான். எல்லோராலும் தாக்கப்பட்ட அபிமன்யுவால் உடன் எழுந்திருக்க முடியவில்லை. அத்தருணத்தில் தனது கதாயுதத்தால் அபிமன்யுவின் தலையில் பலமாக ஓங்கி அடித்ததால் அபிமன்யு இவ்வுலகை விட்டுப் பிரிந்தான்.

அபிமன்யு இளஞ் சிங்கமானாலும் சிறுபிள்ளைதானே. அவனை இப்படியா அதர்ம வழி நின்று கொன்றனர்.? துரியோதனன், துச்சாதனன் தான் தர்மம் தெரியாதவர்கள். ஆனால் குல குருவான கிருபாச்சாரியாரும், துரோணாச்சாரியாரும் கூட அங்கே இருந்தார்கள். அவர்களுக்குமா தர்மம் தெர–ியவில்லை.?... நினைக்க வெறுப்பாகவே இருக்கின்றது. ஒருவனைக் கொல்ல இதுவா வழி? இது தான் தர்மமா? என் அம்மாவுடன் வாதாடினேன். என் அம்மா கூறிய கருத்துக்களை எழுதுகின்றேன். 13ஆம் நாள் போரில் அபிமன்யு இறக்கவேண்டும் என்பது விதி. அதை யாராலும் மாற்றமுடியாது. அந்த விதிதான் அருச்சுனனை சுசர்மன் போருக்கு அழைத்தது. சிவபெருமானிடம் இருந்து பெற்ற வரத்தினால் ஜெயத்திரன் மற்றைய நான்கு பாண்டவர்களையும் வியூகத்தின் உள்ளே போக விடாமல் தடுத்தது. அபிமன்யு உயிர் பிரியும் வேளையில் அருச்சுனனை அழைப்பதற்காகச் சங்கை எடுத்த ஊத அந்தச் சங்கின் சத்தம் அருச்சுனனுக்குக் கேட்காதபடி கிருஷ்ணர் தனது பஞ்சசன்யம் என்னும் சங்கை ஊதியது, யுதிஷ்டிரர் போருக்கு செல்லும்போது எல்லாரையும் போய்வா என்று கூறுவார். அன்றையதினம் அபிமன்யுவை போ என்று மட்டும் கூறினார். ஏன் தெரியுமா? இவைகளை நோக்கும் போது என்ன தெரிகிறது.? தர்ம வழி நின்றோ அதர்ம வழி நின்றோ அன்றைய போரில் அபிமன்யு இறக்க வேண்டும் என்பது விதி என்றார். தர்மத்தின் நிலைகேட்க இது தான் விதி என்று வித–ியின் வலிமை பற்றி கூறியுள்ளார்.

**சோழன் ஆனந்தராசா**
**வயது பதின்மூன்று**




SHIVA AND MARKANDEYA
SAGE MRIKANDU OBSERVED SEVERE PENANCES TO PROPITIATE LORD SHIVA.
WHEN LORD SHIVA APPEARED BEFORE HIM—
LORD, FAVOUR ME WITH A SON.
DO YOU WANT A SON WHO WILL LIVE LONG THOUGH LACKING IN VIRTUES...
...OR A SON WHO WILL BE WISE AND VIRTUOUS BUT WILL LIVE FOR ONLY SIXTEEN YEARS?
I WILL HAVE THE VIRTUOUS SON, MY LORD.
GRANTING THE WISH OF THE SAGE, LORD SHIVA VANISHED.
IN DUE COURSE, MARUDVATI, MRIKANDU'S WIFE, GAVE BIRTH TO A SON.
THE BOY SHALL BE NAMED MARKANDEYA.
25


WHILE BARELY SIXTEEN, MARKANDEYA HAD MASTERED THE VEDAS.
MRIKANDU, YOU ARE FORTUNATE TO HAVE SUCH A BRILLIANT SON.
WHEN THE VISITING SAGES LEFT—
I CANNOT FORGET THAT ALL THIS BRILLIANCE WILL SOON BE PUT OUT BY CRUEL DEATH.
JUST THEN MARKANDEYA CAME HOME WITH THE FLOWERS FOR WORSHIP.
MOTHER! WHY ARE YOU WEEPING? WHAT CAN I DO TO MAKE YOU SMILE?
WHY DON'T YOU SPEAK, MOTHER? DO YOU THINK I CAN'T GET YOU WHAT YOU WANT? I AM NOT A CHILD...


...I WILL BE SIXTEEN YEARS OLD TOMORROW!
SON, THAT IS WHY YOUR MOTHER IS WEEPING.
WHY? WHAT IS WRONG WITH BEING SIXTEEN?
I WILL EXPLAIN. LISTEN!
WHEN MRIKANDU TOLD HIM ABOUT THE EVENTS LEADING TO HIS BIRTH—
DON'T CRY, MOTHER. I WILL NOT DIE.
I WILL SEEK IMMORTALITY THROUGH THE GRACE OF SHIVA WHO IS THE CONQUEROR OF DEATH.
MAY YOU SUCCEED BY HIS GRACE!


SHIVA, I LEAVE MY SON TO YOUR MERCY. PROTECT HIM.
ARLY NEXT MORNING, MARKANDEYA EACHED THE SEA-SHORE WHERE HE MADE SHIVA LINGA OUT OF THE WET SAND...
...AND ADORNED IT WITH FLOWERS
HEN HE SAT DOWN TO PRAY.
TOWARDS NIGHTFALL, HE BEGAN TO SING AND DANCE BEFORE THE LORD.


SUDDENLY —
GET READY TO LEAVE THIS WORLD.
IT WAS YAMA, THE GOD OF DEATH.
O LORD OF DEATH, PLEASE WAIT. I HAVE NOT YET FINISHED MY WORSHIP.
FOOLISH BOY, DON'T YOU KNOW THAT DEAT WAITS FO NONE?
PLEASE DO NOT OBSTRUCT ME IN MY WORSHIP OF LORD SHIVA.
FOOL! DO YOU HOPE TO ESCAPE FROM ME BY CLINGING TO SHIVA? THE GRIP OF DEATH IS FATAL AS YOU SHALL NOW KNOW.


AMA CAUGHT MARKANDEYA'S NECK IN HE NOOSE...
...AND DRAGGED HIM.
LORD, PROTECT ME.
HE NEXT MOMENT, SHIVA SPRANG ROM THE LINGA AND KICKED AMA ON THE CHEST.
LORD!
LORD, PARDON ME.
WHEN YAMA DEPARTED—
O LORD, THE SOURCE OF LIFE, I SALUTE YOU.
MARKANDEYA, YOU WILL FOREVER BE FREE FROM DEATH. YOU WILL BE IMMORTAL.
SHIVA VANISHED...
...AND MARKANDEYA RETURNED HOME.
MY SON!
MOTHER! THE LORD DID SAVE ME!

KUMARANS

# குமரன்ஸ்

## *Imports & Exports*

உங்களுக்கு அன்றாடம் தேவையான லீலா தயாரிப்புப் பொருட்களை மொத்த விற்பனை விலைக்குத் தொகையாக வாங்கி சிக்கனமடையுங்கள்.

Imports & Exports

**FREE PARKING AVAILABLE**
**FOR OUR CUSTOMERS**

**KUMARANS LIMITED**
**142-144 HOESTREET**
**WALTHAMSTOW, LONDON E7 4QR**

**TEL:**
**0208 530 3033**
**0208 521 4955**
**0208 521 4411**

**FAX:**
**0208 530 5655**
**0208 521 9482**

லீலா தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்

KUMARANS

# நாவலரும் சிவசங்கர பண்டிதரும்

யோகேஸ்வரி கணேசலிங்கம்

***யாழ்ப்பாணத்திலிருந்த சமஸ்கிருத பண்டிதர்களுள் இவரே சிரேட்டரெனலாம். இவர் சமஸ்கிரு தத்திலுள்ள ஆகம சாத்திரங்களிலும் வல்லவர். தமிழிலுள்ள சித்தாந்த நூல்களிலும் சைவநெறியொ ழுக்கத்திலுஞ் சிறந்தவர்.***

சங்கர பண்டிதர் பற்றி மகாவித்துவான் சி. கணேசையர் (1878–1958)இவ்வாறு கூறுகின்றார். இக்கூற்றிலிருந்து சங்கர பண்டிதர் அக்காலத்துச் சமஸ்கிருத பண்டிதர்களுள் முதன்மையானவர் என்பதும், அதே நேரத்தில் தமிழ், சித்தாந்தம் என்பனவற்றை ஆழமாக அறிந்திருந்தார் என்பதும் துலக்கமாகின்றது. இவரது தமிழ், வடமொழி அறிவு பலரை இவரிடம் பாடங்கேட்கத் தூண்டியதால் பலர் இவரது மாணாக்கர்களாக விளங்கினர். இவர்களுள் சுன்னாகம் முருகேச பண்டிதர், கீரிமலை சபாபதிக்குருக்கள் என்போர் குறிப்பிடத்தக்கோராவர். சுன்னாகத்தில் பிறந்து நீர்வேலியில் வாழ்ந்த இவர் நீர்வேலியில் பல மாணாக்கர்களுக்கு ஆசானாக விளங்கியதோடு கூடவே பல நூல்களையும் எழுதினார். இவர் எழுதிய சைவப்பிரகாசனம், சுத்தசங்கிரகம், அகநிர்ணயத் தமிழுரை, அநுட்டானவிதி என்பன சைவ சமய உண்மைகளை விளக்குவனவாகவும் தருக்க ரீதியாக எழுதப்பட்டனவாகவும் விளங்குவன. கிறிஸ்து மத கண்டனம், சிவதூஷண கண்டனம் என்பன அக்காலத்திலே வேகமாகப் பரவிய பரசமயமாகிய கிறிஸ்துவத்துக்கு எதிராக எழுதப்பட்ட நூல்களாக விளங்குகின்றன. இவற்றைக் கொண்டு பார்க்குமிடத்து மேற்கூறிய சி. கணேசையர் கூற்றிலுள்ள உண்மை புலப்படாமற் போகாது. சங்கர பண்டிதர் (1829–1870) வாழ்ந்த காலத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் அன்று வாழ்ந்த தமிழ் அறிஞருள் தலையாயவராகக் கருதப்பட்டவர் என்பது பலரும் அறிந்த உண்மை. நாவலரது வாழ்க்கையாலும், அவரது செயற்கரிய செயல்களாலும் ஈர்க்கப்பட்ட பலர் அவர் காலத்திலும் அவர் காலத்தின் பின்னரும் நாவலர் வழியில் இயங்கினர். இவர்களுள் வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், குமாரசாமிப்புலவர். சபாபதி நாவலர் என்போர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்களாவர். இவர்கள் யாவரும் நாவலரால் ஆரம்பிகக்ப்பட்ட பணிகளில் ஒன்றையோ, பலவற்றையே தொடர்ந்து நடாத்தியவர்களாகவும், நாவலரிடம் பாடங் கேட்பவர்களாகவும் நாவலர் நிறுவிய பாடசாலை களில் கல்வி கற்பித்தோராகவும் விளங்கினர். இவ்விதமாக நாவலர் காலத்திலும், அவர் காலத்தின் பின்னரும் அவர் வழியில் இயங்கிய இவர்களை நாவலர் மரபினர் எனக்கூறமுடிகின்றது.

நாவலரோடு சமகாலத்தில் வாழ்ந்த சங்கர பண்டிதர் நாவலர் வழிவந்த நாவலர் மரபிடமிருந்தும் வேறுபடுகின்றார் என்றே கருத வேண்டியிருக்கின்றது. சங்கர பண்டிதருக்கும், ஏனையோருக்கும் உள்ள வேறுபாட்டை இவ்விடத்தில் ஆராய்தல் பொருத்தமே. சங்கர பண்டிதருடய வாழ்க்கை, பணி என்பனவற்றைப் பார்க்குமிடத்து இவருக்கு நாவலரோடு மேற்கூறியவர்களைப் போன்று நேரடித்தொடர்பு இருக்கவில்லை என்று கூற முடிகின்றது. ஏறத்தாழ சமகாலப் பகுதியில் வாழ்ந்த இவர்கள் இருவரும் கல்வி அறிவு மிக்கவர்களாகவும் மாணாக்கர் குழாத்தைத் தம் அறிவு, ஆற்றலால் கவர்ந்தவர்களாகவும் விளங்கிய அதே சமயத்தில் அக்கால சமுதாய அரசியல் நிலைமைகளால் ஒரேவிதமாகப் பாதிக்கப்பட்டவர்களாகவும் விளங் கினர். எனவே இருவரும் ஒரேகாலப் பகுதியில் சைவம், தமிழ் என்பனவற்றிற்கு உழைத்த கல்வியாளராக விளங்கினர் என்பதும் பெறப்படுகின்றது. இவ்விதம் நாவலரும் சங்கர பண்டிதரும் வாழ்ந்த காலம் ஆற்றிய பணிகள் என்பனவற்றில் ஒத்திருந்த போதும், சங்கர பண்டிதர் நாவலரைத் தமது பணிகளுக்கு ஒரு வழிகாட்டியாக ஏற்றுள்ளார். தன்னளவில் சங்கர பண்டிதர் ஒரு மகாவித்துவானாக விளங்கிய போதும் ஓர் இயக்கத்தை நடாத்தி இலட்சிய புருஷராக வாழ்ந்த ஆறுமுக நாவலர் தலைமையைத் தானும் ஏற்றுக்கொண்டார். ஆகவே இவை யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது

நாவலர் மரபில் ஒழுகிய ஏனையோரிலிருந்து வேறுபட்டு விளங்கினார் என்பது பெறப்படுகின்றது.

ஆறுமுக நாவலர், சங்கர பண்டிதர் ஆகியோர் வாழ்ந்த காலப் பகுதியிலே யாழ்ப்பா ணத்தில் கிறிஸ்ததவ சமயப் பிரசாரம் வெகு வேகமாக நடைபெற்றது. மதப் பிரசாரத்தைத் தமது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் கிழக்கிற்கு வருகை தந்தார்கள் என்பது வரலாறு கண்ட உண்மை. இக்கிறிஸ்தவர்கள் தமது மதத்தைப் பரப்பக் கையாண்ட உபாயங்களாலும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதலாற் கிடைக்கும் சலுகைகளாலும் ஏமாற்றப்பட்ட சைவர்கள் தம் மதத்தை விட்டுக் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தார்கள். இதனைக் கண்டு மனம் பொறாத நாவலர் துணிவுடன் எதிர்ப்புக்குரல் கொடுத்தார்.

இத் தேசத்திலுள்ள வறியவர்கள் அநேகர் சைவசமயமே மெய்ச்சமயமென்று அறிந்தும், அன்னம் வஸ்திரம் முதலியவை பெற்றுப் படிக்கும் பொருட்டும், உபாத்தியாயர் உத்தியோகம் பிரசங்கியுத்தியோகம் முதலிய உத்தியோகங்களைச் செய்து சம்பளம் வாங்கும் பொருட்டும் கவர்மென்டு உத்தியோகத்தினிமித்தம் துரைமார்களிடத்தே சிபாரிசு செய்விக்கும் பொருட்டும் கிறிஸ்து சமயப பெண்களுள்ளே சீதனமுடையவர்களையும் அழகு டையவர்களையும் விவாகஞ் செய்யும் பொருட்டும் கிறிஸ்து சமயத்திலே பிரவேசிப்பாராயினர் என்ற ஆறுமுக நாவலர் வாக்கியங்கள் அக்கால கிறிஸ்தவ மதமாற்றத்தை விளக்கப்போதியனவாம். தம் சொந்த இலாபம் கருதி மாறிய சைவர்களின் இழிநிலை யைக் கண்டு மனங்கொதித்தே நாவலர் மேற்கூறிய வாசகங்களை வருத்தத்துடன் எழுதினார். இந்த நிலை நீடித்தால் நமது மதம், மொழி பண்பாடு, என்பன நலிவடைந்து ஈற்றில் அழிந்தொழிந்துவிடும் என்பதனை உணர்ந்த நாவலர் முழுமூச்சாக கிறித்ஸ்தவ மத ஊடுருவலை எதிர்த்தார். நம்மவர்கள் தம் மொழியையும், சமயத்தையும், தனித்துவத்தையும் இழக்காமலிருக்கப் பல ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டார். தமது பிறந்த இலங்கை நாட்டிலும் அயல் நாடாம் தமிழ் நாட்டிலும் அவர் புரிந்த பணிகள் மூலம் பல மாற்றங்களை உண்டு பண்ணினானர். பொது மக்களிடையே புதிய சிந்தனை உருவாகத் தொடங்கியது. அவர்கள் தமது பண்டைப் பெருமையையும் சைவ நெறிகளையும் உணரத்தொடங்கினர். அந்நிய மோகத்திலிருந்து விடுபட்டு தமது மொழியையும் தனித்துவத்தையும் பேணவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. இதனால் பலர் நாவலர் பணிகளில் பங்கு பற்றி அவரோடு கூட உழைக்க முன்வந்தனர். நாவலர் போலவே அந்நிய மதத்தவரின் பிரசாரத்தை முறியடித்த நம்மவர் உண்மையறிந்து தன்மானத்துடன் வாழ்வதற்காகத் தன் வாழ்வையே அர்பணித்துச் செயலாற்றியவர் சங்கரபண்டிதர்.

கிறிஸ்தவ மதத்தை எதிர்த்து அரசாங்கச் செல்வாக்கோடு வாழ்ந்த பாதிரிமாருடன் நேரடி மோதல்களில் ஈடுபட்டும் கருத்தாழம் மிக்க பிரசாரங்களைத் தருக்க ரீதியாகச் செய்தும் செயலாற்றிய சங்கரபண்டிதர், நாவலர் ஆகிய இருவரும் அவர்கள் வழி நின்றோரும் துணிவுடன் கிறிஸ்தவ மதத்துக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியிராவிடில் சைவமதம் காலப்போக்கில் அழிந்துபோய் இருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டா. சங்கர பண்டிதர் வாழ்க்கை பணி என்பனவற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்து கிறிஸ்தவ மதத்தையும், அதைப் பரப்பிய பாதிரிமாருடன் அவர் நடத்திய நேரடி மோதல்களையும் அறிந்து கொள்ளலாம். நாவலர் தலைமையில் உருவாகிய கிறிஸ்தவசமய எதிர்ப்பியக்கம் பாதிரிமாருக்கு அச்சத்தைக் கொடுத்தது. கிறிஸ்தவப் பாதிரிகளாகிய கில்னர், பொன்சீன் பாதிரிகளின் தலைமையில் சைவத்துக்கான எதிர்பியக்கம் நடைபெறத் தொடங்கியது. கிறிஸ்தவர்களால் நடத்தப்பட்ட பத்திரிகைகளாகிய உதயதாரகை, இலங்கைக் காவலன், கத்தோலிக்க பாதுகாவலன் என்பன முழுமூச்சுடன் சைவசமய உண்மைகளைக் குழிதோண்டிப் புதைத்தன. இவ்விதமாகப் பத்திரிகை வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் சைவசமய உண்மைகள் மறுக்கப்பட்டதைக் கண்ட சங்கர் பண்டிதர் துணிவுடன் கிறிஸ்தவ மத கண்டனங்களைக்

காரசாரமாக எழுதினார். கிறிஸ்தவப் பாதிரிமாரின் செயல்கள் ஒவ்வொன்றும் கண்டிக்கப்பட்டு சைவசமய உண்மை மக்களுக்கு விளங்கக்கூடிய முறையில் கூறப்பட்டது.

இயக்க வீரராகிய நாவலர் இக்காலத்திலே பரந்துபட்ட பல பணிகளில் ஈடுபட்டுச் செயலாற்றியமையால், காலத்துக்குக்காலம் இந்தியாவிற்குச் செல்ல வேண்டியும் பிற தொண்டுகளில் உழைக்க வேண்டியும் இருந்தது. இந்நேரங்களில் எல்லாம் கிறிஸ்தவ மத எதிர்ப்பியக்கத்தைச் சங்கர பண்டிதர் நடத்திச் சென்றிருக்கின்றார். சம்பளக் கிறிஸ்தவர், பாதிரிமார், போன்ற தொடர்களைப் பயன் படுத்திச் சங்கர பண்டிதரும் அவரைச் சார்ந்தோரும் பாதிரிமாருடன் நேரடி மோதல்களில் ஈடுபட்டனர். இந் நோக்கத்திற்காக 1864 இல் சங்கர பண்டிதர் பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஆரம்பித்தார். இச் சங்கத்திலே அக்காலத்துத் தமிழறிஞர் பலரும் அங்கத்த வர்களாயிருந்து சைவ சமய வளர்ச்சிக்கு உழைத்தனர். வாரந்தோறும் கூட்டப்பட்ட இச்சங்கத்திலே ஒரு வாரம் பரமத கண்டனமும், அடுத்தவாரம் சுயமத ஸ்தாபனமும் செய்யப்பட்டன. இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் நாவலர் இந்தியாவில் இருந்தார். நாவலர் யாழ்ப்பாணத்தில் இல்லாத சமயத்தில் சங்கர பண்டிதர் நாவலர் மரபில் ஒழுகி அவர் இலட்சியத்தை நிறைவேற்றியுள்ளார் என்பதற்கு இது ஓர் தக்க உதாரணமாகும். இச்சங்கத்தின் நோக்கத்தையும், அதன் இயக்கத்தைம் விளங்கிக் கொள்ள மேல்வரும் இலங்காபிமானிப் பத்திரிகைச் செய்தி ஆதார மாகின்றது.

சென்ற மாதத்திய வார மொன்றில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சைவர்களுட் கற்றோரும், மற்றோரும் கூடிப் பரமத கண்டனஞ் சுயமதஸ்தாபனம் என்னும் அபிப்பிராயம் கொண்ட சிற்சில கூட்ட நிருபஞ் செய்தார்கள். ஒரு வாரம் பரமத கண்டனமும், அடுத்தவாரம் சுயமத ஸ்தாபனமுஞ் செய்தார்கள். இச்சங்கத்தக்கு அக்கிராசனபதி சங்கர பண்டிதர் லிகிதர் தில்லைநாத உபாத்தியாயர், சம்பந்தப் புலவர், சுப்பிரமணியர்...

இத்தருணம் எங்கள் ஆறுமுக நாவலர் இங்ஙனமில்லையே என விசனமுற மற்றொரு வரெழுந்து அவர் எங்கனமிருந்தால் இவ் விஷயத்துக்கு உதவி செய்வார் எனத் துணை செய்து விசனமொழிக்க... ஒருவர் பதுங்கினார் பாதிரிமார் என்று பல்லவி கூட்டி அநுபல்லவியையும் சரணங்களையும் முடிக்க கூட்டம் முடிந்தது.

ஓர் அன்பன் இலங்காபிமானப் பத்திரிகைக்கு எழுதிய இப்பத்திரிகைக் கடிதத்திலிருந்து ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் இல்லாத சமயத்திலேயே சங்கர பண்டிதரால் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது என அறிய முடிகின்றது. நாவலர் யாழ்ப்பாணத்தில் இல்லாத இக்காலகட்டத்திலே கிறிஸ்தவப் பாதிரிமார் முழு முனைப்போடு மதப்பிரச்சாரத்தில் ஈடுபட்டு இயங்கினர். நாவலர் எதிர்ப்பால் தாம் கிழக்கிற்கு வந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லையே எனப் போர்சிவல் பாதிரியாருக்குக் கடிதம் எழுதியமையும் அவரது சமயப் பிரசங்கங்களைக் கண்டித்து, அவை தமது மதப்பிரசாரத்துக்குத் தடையாக விளங்குகின்றன என அவர்கள் சலித்துக் கொண்டமையும் உதயதாரகை பத்திரிகை வாயி லாக அறியும் உண்மையாகும். இத்தகைய ஒருவர் யாழ்ப்பாணத்தில் இல்லாத சமயத்திலே சங்கர பண்டிதரும், பிறரும் இவ்வாறு செயலாற்றாது இருந்திருந்தால் கிறிஸ்தவ சமயம் யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவியிருக்கும் என்பது சொல்லவும் வேண்டா. ஆனால் நாவலர் இல்லாத தருணத்திலே சங்கர பண்டிதர் இச்சங்கத்தை ஆரம்பித்து வாராவாரம் கிறிஸ்தவத்துக்கு எதிராகப் பிரசாரம் நடத்தியமை கிறிஸ்தவர்களைக் கவலைக் குள்ளாக்கியது. இக்காலத்து உவெஸ்லியன மிஷனரியான யோ. கில்னர் என்பவர் வெளியிட்ட அறிவித்தலின் பின்னணியில் நாம் இதனை விளங்கிக்கொள்ளலாம்

வண்ணார் பண்ணையில் வசிக்கும் சைவருக்கும் பிறருக்கும் இதைக் கொண்டு இதனடியில் கையொப்பம் வைத்திருக்கிருக்கிறவர் தெரியப்படுத்துவது என்னவெனில் மேற்படி சைவராவது, கிறிஸ்து மத அனுசாரிகளல்லாத

பிறராவது கிறிஸ்து மத மார்க்கத்துக்கு அல்லது விவிலிய ஆகமத்துக்கு விரோதமாய்க் கொண்டுவரும் நியாயமான ஆட்சேபங்களைக் கேட்டு விடைகொடுக்கும் நோக்கமாக இம்மாதம் 22ஆம் திகதியாகிய வருகிற செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் உவெஸ்லியன் மிஷனைச்சேர்ந்த செட்டித்தெருப் பள்ளிக்கூட வங்களாவில் கூட்டம் கூடுமென்பதே.
யோ. கில்னர்.

கில்னர் பாதிரியாரின் மேற்கண்ட பத்திரிகை விளம்பரம் அக்கால சமய நிலையை விளக்கப் போதியதாகும். ஒரு புறம் சங்கர பண்டிதராலும் அவரைச் சேர்ந்தவர்களாலும் சைவ சமய உண்மைகள் விளக்கப்பட்டுக் கிறிஸ்தவ சமய கண்டனங்கள் நடத்தப்பட்ட அதே நேரத்தில், மறு புறம் கில்னர் போன்ற கிறிஸ்தவ பாதிரிகளால் உவெஸ்லியன் பாடசாலைகளில் கிறிஸ்தவ மதஸ்தாபனம் நடந்திருக்கின்றது. சமயத் தடுமாற்றம் மக்கள் மத்தியில் நிலவிய காலத்தில் அத்தடுமாற்றத்தை நீக்கக்கருதி சைவர்களும் கிறிஸ்தவர்களும் முயன்றனர். இதனால் கிறிஸ்தவ, சைவ மதவாதங்கள் கண்டனங்கள் வெகு மும்முரமாக நடைபெற்றன. மேற்கூறப்பட்ட விளம்பரத்தின்படி உவெஸ்லியன் மிஷனைச்சேர்ந்த செட்டித்தெருப் பள்ளிக்கூடத்திலே கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டம் சைவர்களால் குழப்பப்பட்டது. இக்கூட்டத்தைக் குழப்பிய சைவர்கள் பாதிரிமாரையும் கிறிஸ்தவர்களையும் வாயில் வந்தபடி தூஷித்துக் கேலி செய்தார்கள். அத்துடன் கிறிஸ்தவக் கூட்டத்துக்கு எதிராக சைவர்கள் கூட்டமும் கூடினர் எனப் பத்திரிகைச்செய்தி கூறுகின்றது. இப் பத்திரிகைச் செய்தியின் இறுதியில் வண்ணார் பண்ணைச் சைவர்கள் செய்யும் கூத்துக்களைப் பார்த்தால் வெகு வேடிக்கையாகத்தான் இருக்கின்றது. எனக் கூறப்பட்டிருப்பதை நோக்கின் எந்த அளவிற்கு சைவ கிறிஸ்தவ மோதல் நடைபெற்றது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

இக்காலப்பகுதியில் சங்கர பண்டிதர் கில்னர் பாதிரியாருக்கு எழுதிய கடிதம் ஒன்று கிறிஸ்தவர்களுடன், சைவர்கள் கொண்டிருந்த போட்டி மனப்பான்மை எத்துணை தீவிரம் வாய்ந்ததாக விளங்கியதென்பதை விளக்கப் போதியதாகும்.

வண்ணார் பண்ணை மதவாத சபையின் அக்கிராசனபதியாகிய கில்னர்ப் பாதிரியாரவர்கட்கு விக்கியாபனம். நுங்கள் மதவாத சபையின் இங்கிலீசுக் கடிதத்தை... மொழிபெயர்த்து அறிந்து கொண்டோம். நுங்கள் சமாசியருளொருவராகிய உவுட் என்பவர் இங்கிலீசிலே தம்மோடு சமயவாதஞ் செய்யும் பொருட்டு இங்கிலீசுணர்ச்சி யில்லாத பிராமணர்களையும், சைவர்களையும் இலங்காபி– மானிவாயிலாக அறை கூவியழைத்தலும் ஆறுமுக நாவலர், சங்கரபண்டிதர் என்பவர்கள் குறித்த மதவாத சபையில் வாதஞ் செய்வதற்கு அஞ்சுகின்றனர் என்று இலங்காபிமானியிற் பிரகடனஞ் செய்தலும் யாது கருதியோ அறியோம். நீரிவையெல்லா முற்று நோக்கியா மீண்டு யோகீஸ்வரர் செய்த வாதவிதி என்னும் நூற்கருத்தை அநுசரித்து விவரிக்கும் வாத விதிகட்குடன் பட்டுக் கிரமமாகச் சமயவாதஞ் செய்யும் கருத்துடையீராயின் யாம் வாதஞ்செய்வதற்குச் சிறிதும் தடையின்று....

இங்ஙனம்
நீர்வேலி சைவப்பிரகாச சமாசீயருளொருவராகிய சிவ. சங்கர பண்டிதர்.

இந் நீண்டகடிதம் இலங்காபிமானிப் பத்திரிகைக்குச் சங்கர பண்டிதர் எழுதியதாகும். இதிலே பதின்னான்கு விதிகளைக் கூறிய சங்கர பண்டிதர் இம்முறைகளுக்கு உடன் படுவீராயின் நாம் வாதஞ் செய்யத் தடையாதுமில்லை. என்று பகிரங்கமாக அறைகூறுகின்றார். சமய வாதங்கள் மிகத் தீவிரமாக நடந்தன என்பதற்கு இந் நீண்டகடிதம் சான்றாகும். சங்கர பண்டிதருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே சமய மோதல்கள் நடைபெற்றமையும் சங்கரபண்டிதரதும், அவரது கூட்டத்தினரதும் எதிர்ப்பினைக் கிறிஸ்தவர்கள் அறிந்து அவர் மீது வெறுப்புக்கொண்டிருந்தனர் என்றும் அறிய ஆதாரங்களுள சங்கர பண்டிதரும் அவர் கூட்டாளிகளும் சில வருஷங்களாகக் கிறிஸ்தவ வேதாகமத்துக்கெதிராகப் பிரயாசைப்பட்டு ஓர்

கண்டனமியற்றுகின்றனர்........... சங்கர பண்டிதரும்,வேறு சில வாலிபரும் செ.டி. பொஸ்வெல் ஐயரிடத்திற் போய் அதை அந்தரங்கத்திற் தர்கித்துப் பார்ப்பதற்கு ஓர் சமயத்தை நியமிக்கும் படி கேட்டுக் கொண்டார்கள்.................... பொஸ்வெல் ஐயரவர்கள் உண்மையே மேற்கொள்ளுமென அறிந்து சங்கர பண்டிதரையும், அவர் கூட்டாளிகளையும் சந்திக்கப் பூரண சித்தமுடையவராகி அவர்கள் தம்மிடத்தில் வரும் படி விரும்பி நிற்கின்றனர் என்ற கடிதத்திலிருந்து கிறிஸ்தவ சைவ தர்க்கங்கள் நடைபெற்றுன எனவும் அத்தர்க்கங்கள் நடைபெறுவதற்குச் சமயம் நியமிக்கப்பட்டுக் குறிப்பிட்ட நேரத்தில் அவை நடைபெற்றன எனவும் அறிகின்றோம். இவ்விதமாகச் சங்கர பண்டிதர் பாதிரிமாரையும் கிறிஸ்தவர்களையும் நோக்கிக் கண்டனப் பிரசுரங்களையும், பத்திரிகைக் கடிதங்களையும், எழுதியதோடு நில்லாது கிறிஸ்வ சமய கண்டன நூல்களையும் எழுதினானர். கிறிஸ்துமத கண்டனம், மிலேச்ச மத விகற்பம், சற்பிரசங்கம் என்பன அவர் எழுதிய கண்டன நூல்களாகும். இந் நூல்களைப் படிக்கும் போது, சங்கர பண்டிதர் கிறிஸ்தவ நூல்களைக் கற்று அவற்றில் என்ன கூறப்பட்டிருக்கின்றது என்பதனை அறிந்தே அம் மதத்தைக் கண்டித்துள்ளார் என்பது புலனாகின்றது. கிறிஸ்துவத்தை எதிர்த்துச் சைவத்தை நிறுவும் இடங்களில் இரு மத நூல்களையும் ஆதாரமாகக் கொண்டே உண்மையை நிறுவ முயலுகின்றார். தனது கருத்தை வெளியிட விவிலிய நூலில் இருந்து மேற்கோள்கள காட்டிச்செல்வது இவருக்கு விவிவலிய நூலில் இருந்த ஆழ்ந்த அறிவை விளக்குகின்றது.

கிறிஸ்துவ நூல்களிலே நிறைந்த பயிற்சியும் பரந்த அறிவும் இருந்தமையாலேயே பண்டிதரவர்கள் அச்சமயத்துக்குரிய நூல்களைக் கொண்டே அம்மார்க்கத்தைக் கண்டிப்பதில் சிறந்து விளங்கினார். 1882 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பட்ட கிறிஸ்துமத கணடனம் என்னும் நூலிலே இப்பண்பினைப் பாரக்கக் காணலாம். கிறிஸ்துமார்க்கத்தின் உயிர்நிலையை நன் குணர்ந்தவரான பண்டிதர் அதன் உயிர்குடிக்ககூடிய பாணங்களைத் தொடுத்தார். அவருக்கு முன்னரும் அவர் காலத்திலும் வேறு சிலரும் நடத்திய போர்களுக்கு இறுதி வீச்சாகவும் அவற்றை முடிவாக்கும் செயலாகவும் அமைந்தது பண்டிதரின் பாசுபதாஸ்திரம்.

முத்துக்குமார கவிராசர் (1780–1851) ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் என்னும் இரு நூல்களால் கண்டனப் போருக்கு அறைகூவிக் கொடியெடுத்தார். நாவலர், தாமோதரம்பிள்ளை முதலியோர் முழு மூச்சான போரை நடாத்தினர். சங்கர பண்டிதர் எதிரியை வீழ்த்திக் கிடத்திவிட்டார். மதுரை சதாவதானம் சொ. மு. செட்டியார் 1882 இல் பாடிய ஒரு செய்யுள் இக்கருத்தை உருவகமாக்கியுள்ளது. கவித்துவம் கொப்புளிக்கும் அச்செய்யுள் நினைவுகூரத்தக்கது,

**முத்துக்குமார கவிராச சேகரன் மொய்யமரிற்**
**றத்தித் தடக்குண்டு நாவலர் தாவச் சவிமடிந்து**
**சித்தங் கெடவுட றாமோத ரேந்திரன் சிதைத்த பைபிள்**
**செத்துக் கிடக்குது பார்சிவ சங்கரன் றெம் முனைக்கே**

பைபிளை வீழ்த்திய போரில் கவிராசர் நாவலர், தாமோதரனார், பண்டிதர் ஆகிய நால்வரும் நயம்படக் குறிப்பிட்டிருத்தல் கவனிக் கத்தக்கதாகும். பதிற்றுப்பத்து என்னும் நூலில் பெருஞ் சேரல் இரும்பொறை என்ற சேர மன்னனை அரிசில் கிழார் பாடிய செய்யுள்ள ஒன்றிலே

**புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்**
**நிலவரை நிறீஇய நல்லிசைத்**
**தொலையாக் கற்ப நின் தெம்முனை யானே**

என்னும் அடிகள் வருகின்றன. தெம்முனை என்ற பிரயோகம் அங்கு வருகிறது. அது வேறொரு காலத்துப் போர், சென்ற நூற்றாண்டிலே நிகழ்ந்த பிறிதொரு போரின் தெம்முனை பற்றியும் அதில் முன்னின்ற தொலையாக் கல்வியுடைய சங்கர பண்டிதர் பற்றியும் வியந்து பாடியிருக்கிறார் இராமசாமிச் செட்டியார்.

மேற் கூறியவாறு தான் வாழ்ந்த காலத்தின் தேவையை உணர்ந்து, அதனாலே உந்தப்பட்டுச் சைவசமய பரிபாலனத்துக்காகச் சமயப்போரில் ஈடுபட்டுக் கண்டன நூல்களையும் பத்திரங்களையும் வரைந்த பண்டிதர் சைவப்பிரசங்கம் செய்வதிலும் வல்லவர். தர்க்க முறையும், உண்மையும்

அமைத்து விளங்கும் நூல்களை எழுதிய சங்கர பண்டிதர் பிரசங்கங்கள் கேட்போர் மனதை ஈர்ப்பதாக அமைவது இயல்பே. அவரின் பிரசங்கத்தைக் கேட்டு உண்மை யுணர்ந்ததனால் மதம் மாறும் எண்ணத்தைக் கைவிட்டோர் பலர். வெண்ணீறணிந்து சிவ வேடம் பொலிய இவர் செய்யும் பிரசங்கத்தைக் கேட்கப் பல இடங்களிலிருந்தும் மக்கள் கூடுவார்கள். இவரின் ஆற்றல் மிக்க பிரசங்கச் சீரினைக் கையறு நிலைச் செய்யுளொன்றில் அவர் மாணாக்கராகிய சுன்னாகம் முருகேச பண்டிதர் பின்வரும் செய்யுள்களால் விளக்குவார்.

**சைவத்தை நாட்டிப் பரமத மோட்டத் தயங்குமொரு**
**தெய்வத்தைப் போல்வரு சங்கர பண்டித தேசிகர்தாம்**
**மெய்வைத்த கண்டிகை வெண்ணீற்றி னோடு விளங்கிடச்செய்**
**சைவப் பிரசங்கத் தெள்ளமு தென்றினிச சார்குவமே**

நாவலரோடு சமகாலத்தில் வாழ்ந்து நாவலரைப் போலவே தன்னலமற்ற தொண்டுகளை ஆற்றிய சங்கர பண்டிதர் சென்ற நூற்றாண்டில் தோன்றிய சமயத் தலைவர்களுள் ஒருவராவர். நாவலர் அவர் மீது நன்மதிப்புக் கொண்டிருந்தார் என்பதற்கு நாவலரது பெரியபுராண வசனத்துக்கு இவர் சிறப்புப் பாயிரம் பாடியமையே தக்க சான்றாகும். நாவலர் அரும் பெருஞ் சாதனைகளை நிறைவேற்றினாரென்றால் அவர் காலத்தில் வாழ்ந்த பண்டிதர் போன்றோரின் பாரிய நிகழ்ச்சிகளும் அவருக்குச் சாதகமாய் இருந்தமை மனங்கொள்ள வேண்டியதொன்றாகும். நாவலர் இயக்கத்தின் தன்மையையும் கூறுகளையும் தெளிவாய்த் தெரிந்து கொள்ளுவதற்குச் சங்கர பண்டிதர் போன்றோர் பற்றிய நுண்ணாய்வுகள் பெரிதும் வேண்டப் படுவனவாகும். யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கல்வி மரபில் பண்டிதருக்குத் தனியானதோர் இடமுண்டு.




SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

TO **COLOMBO** AND OTHER WORLD WIDE DESTINATIONS

MAIN AGENT FOR SRILANKAN AIRLINES

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES

SriLankan

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ

SriLankan

GLEN CARRIERS LIMITED

Tel: 0208 740 8379/ 0208 749 0595
Fax: 0208 740 4229
BONDED WARE HOUSE
LAKSIRISEVA , 66 NEW NUGE RD, PELIYAGODA
TEL: 575576

Ammanai Saran Addainthal Athika Varamperalam
**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை**
SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
5 Chapal Road, West ealing, London W13 9AE Tel: 0208 810 0835
Charity No: 1014409

# நலிந்தோர் துயர்துடைக்க யாப்பிலே மாற்றம் செய்த முதல் ஆலயம்

இலங்கை மண்ணில் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் துயருற்றுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் துயர் துடைப்பதற்காக கனகதுர்க்கை அம்மன் ஆலயம் தன்னுடைய ஆலய யாப்பின் 2வது பிரிவில் பின்வரும் மாற்றத்தினை மற்றைய ஆலயங்களுக்கு ஒரு முன்மாதிரி–யாக மேற்கொண்டுள்ளது.
ஸ்ரீலங்காவிலும் தமிழ்நாட்டிலும் பட்டினியாலும் மனவிரக்தியாலும் அவதியுறும் இந்துமதப் பிள்ளைகளை பராமரிப்பதற்கு பிறிம்பாகப் பணத்தை ஒதுக்கீடு செய்தல்.

(அ) மேற்குறிப்பிட்ட விடயம் (ஆடி மாதம் 2000 ஆண்டளவில்) ஆலய யாப்பில் சேர்க்கப்பட்டு அறநிலைய ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றதும் இக் குறிப்பிட்ட பணம் ஒதுக்கீடு செய்யப்படும். இப் பணத்தை அறங்காவலர் சபையினரும் நிர்வாக சபையினரும் ஒன்று சேர்ந்த தனி ஒரு குழுவாக (கூட்டமைப்பாக) நிர்வகிப்பர்.

**(ஆ) ஒவ்வொருமாதமும் ஆலய வருமானத்திலிருந்து சகல செலவுகளையும் கழித்து வரும் பணத்திலிருந்து மூன்றில் ஒரு பகுதி அல்லது பத்தாயிரம் பவுண்கள் இவற்றில் எது குறைவானதோ அத்தொகையை நிர்வாக சபை இந்த நிதிக்கு மாற்றுதல் செய்ய வேண்டும்.**

(இ) இக் கூட்டுக் குழு இந்த கணக்கிற்கு மாற்றப்பட்ட பணத்தை 30 நாட்களுக்குள் மாதாந்தம் ஸ்ரீலங்கா அல்லது தமிழ் நாட்டில் உள்ள அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனங்களுக்கு சாதாரண மேலதிக வாக்கின் பிரகாரம் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும்.

(ஈ) எந்த ஒரு மாதத்திலாவது வருமானம் 10,000 பவுண்களுக்கு மேலாக வருமாயின் (மூன்றில் ஒரு பகுதி) உப பிரிவு(ஆ) பிரகாரம் கணிக்கப்பட்ட அப் 10000 பவுணிற்கு கூடுதலாக உள்ள பணம் பிறிம்பான கணக்கில் போடப்படவேண்டும். கூட்டுச் சபையின் சாதாரண மேலதிக வாக்கின் பிரகாரம் பாரிய அழிவுகள் ஸ்ரீலங்காவிலோ இந்தியாவிலோ அல்லது ஐக்கியராச்சியத்திலோ ஏற்படும் நேரங்களில் இப்பணத்தின் ஒரு பகுதி அல்லது முழுவதையும் பயன் படுத்தலாம்.

# ஐக்கியத்தை நாடிய ஆலயங்கள்

இலண்டன் மாநகரத்தில் பல ஆலயங்கள் நாளும் பொழுதும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவ்வாலயங்களுக்கிடையில் ஒரு ஒற்றுமை வாராதா என்று பலர் ஏங்கிக் கொண்டிருக்கும் வேளையில் ஐந்து ஆலயங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஒன்றியத்தை அமைத்தன.இந்த ஒன்றயத்தில் இணைந்துள்ள ஆலயங்கள் பின்வருமாறு. ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம். ஸ்ரீ கணபதி ஆலயம், உயர்வாசற்குன்று முருகன் ஆலயம், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம், இலண்டன் சிவன் கோயில். மற்றைய ஆலயங்களும் சிறு சிறு வேறுபாடுகளை மறந்து இவ் ஒன்றியத்தில் இணைந்து பக்தர்களை மகிழ்விக்குமாறு கலசம் விரும்புகின்றது. .வ் ஐந்து ஆலயங்களும் ஒன்றிணைந்து இலண்டன் நேரப்படி கணிக்கப்பட்ட நாட்காட்டி ஒன்றை வெளியிட்டுள்ளனர். இலை மேற்படி ஆலயங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.


## சமய வகுப்புக்கள்

**இவ் ஆலயத்தில் பிரதி ஞாயிறு தோறும் தமிழ் சைவ வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவ்வுகுப்புகளில் உங்கள் பிள்ளைகளைச் சேர்த்து பிள்ளைகளுக்கு தமிழறிவையும் சமய அறிவையும் பெருக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம்.**


## ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள், புதன், வியாழன் ஆகிய தினங்களில்
8.00am - 3.00 pm
5.00pm - 10.00pm
செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்
8.00am - 4.00pm
5.00pm - 10.30pm

பூசைகள் தினமும்
8.am - 12pm
5pm - 7pm



# ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம்




கிட்டத்தட்ட 10 ஆண்டுகளிற்கு மேல் பழமையும் பெருமையும் அருளும் கொண்ட வேண்டுவார்க்கு வேண்டுவன வாரி வழங்கும் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் கொலண்டின் டென்கில்லடர் மாநகரில் இன்றுவரை அரசிற்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்திலே கோயில்கொண்டு தன்னை நாடி வருபவர்களின் விக்கினங்களை தீர்த்து அருளாட்சி செய்யும் கலியுகத் தெய்வமாக விளங்குகின்றார்.

விநாயகர் கோயில் கொண்ட இடம் மிகவும் சிறிதாக இருப்பதோடு அவ்விடம் அரசிற்கு சொந்தமாக இருப்பதனால் அரசு பழைய கட்டிடங்களை இடித்து நகரை புனர் நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ் அவ்விடத்தை நாம் விரைவில் விலகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது ஒரு வகை நெருக்கடியாக எமக்கு இருந்தாலும் விநாயகர் தனக்கு அந்நிய மண்ணில் சொந்தமாக ஆலயம் அமைய வேண்டும் என விரும்பியுள்ளார்போலும். பல சிரமங்களின் மத்தியில் பல முயற்சிகளின் பின்னர் விநாயகரிற்கு சொந்தமாக ஆகம முறையில் இராஜகோபுரத்துடன் கூடிய ஆலயம் அமைவதற்கு உகந்ததாகிய நிலப்பரப்பை அரசு விலைக்குத் தருவதாக ஒப்புக் கொண்டபின்னர் கொலண்ட் வாழ் மக்களின் நிதிஉதவியுடனும் இலண்டனில் வாழும் சைவத் தமிழ் மக்களின் உதவியுடனும் இலண்டன் இந்து ஆலயங்களின் உதவியுடனும் விநாயகருக்கு மிகவும் விஸேசமான தினமான ஆவணிச் சதுர்ததியில் (1-9-200) ஆலயம் அமைப்பபதற்குரிய நிலப்பரப்பை ஆலயத்தின் பெயரால் கொள்வனவு செய்துள்ளோம். மேற்படி இவ் ஆலய நிலப்பரப்பின் ஒவ்வொரு சதுர மீற்றர்களும் விற்பனைக்கு உள்ளன. பக்தர்கள் இவறடறை வாங்கி ஆலயத்துக்கு உபயமாகக் கொடுக்கலாம். உபயம் செய்பவர்களின் பெயர் நட்சத்திரங்கள் பொறிக்கப்ட்ட மந்திரத்தகடு ஆலயத்தின் கருவறைக்குக் கீழ் வைக்கப்படவுள்ளன. ஒரு சதுரமீற்றரின் பெசுமதி 350 கில்டன்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ன. விரும்புவோர் உரிய பத்திரங்களைப் பெற்று நிரப்பிப் பதிவினைச் செய்யுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

புலம்பெயர்ந்த நாடுகளில் ஆலயங்களின் அவசியம் பற்றி பலர் பலவகையான ஐயங்களை எழுப்பியுள்ளார்கள். இப்படியான வாதங்களை விட்டுவிடுங்கள். விநாயகர்மீது பரிபூரண நம்பிக்கை வையுங்கள். தமிழன் எங்கிருந்தாலும் அங்கு அவன் கலை கலாச்சாரங்களும் கோலோச்சும் என்பது வரலாறு. கலை கலாசாரங்கள் ஆலயங்களை அண்டியே வளர்கின்றன தோன்றுகின்றன. எமது வருங்கால்ச் செல்வங்களின் வாழ்வு கருதி இவ்வாலய அமைப்பில் ஒருங்கே நின்று எங்கள் செல்வ விநாயகருக்கு ஆலயம் அமைப்போம்.

# வரம் ஒன்று தரவேண்டும்

தொன்மைதரு மண்டலங்கள் துதிக்க நின்ற
தூயவனே துதிக்கை முகம் கொண்டவனே
தன்னிகரில் தமிழின் சுவையை ஆய்ந்தளித்து
தரணி யெல்லாம் புண்ணியமே தழைக்கவேண்டிப்
புன்மைதரு நெறி நீங்கிப் புவனமெல்லாம்
பொலிகருணை நலஞ்சிறக்க அருளும்செய்ய
செம்மைமிகு கொலண்ட் டென்கில்டர் கோயில்கொண்ட
ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகரே வரம் ஒன்று தரவேண்டும்

மண்வளமும் மலர்வளமும் நிறைந்திருக்கும்
மாநகராம் டென் கெல்டர் நகர்தனிலே
மன்னவனே உந்தனுக்கு கோயிலொன்று அமைக்கவென
மண்ணினை நீர் மகிழ்வுடனே அமைத்துவிட்டீர்
விண்ணைத் தொடு இராஜகோபுரத்துடனே
விரைந்துனக்கு ஆலயத்தை அமைத்திடவே
பொன்னொடு பெருநிதியும் குறைவின்றிக் கிடைக்க
ஸ்ரீவரதராஜ செல்வ விநாயகரே வரம்ஒன்று தரவேண்டும்

பனிமழையின் குளிரினிலும் பூக்கள் பூக்கும்
பாடுமினம் குளிரினிலும் சுருதி சேர்க்கும்
கடல் தாழ்ந்த இவ் ஒல்லாந்து நாட்டினிலே
கடல் சூழ்ந்த டென்கில்டர் மாநகரில்
கண்கொளிக்கும் இரத்தினங்கள் தானாய்க் கொண்ட
சித்திரத்தேர் தெருவினிலே அசைந்துவர
கண்ணார அதை நான் கண்டுகழித்திருக்க
ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகரே வரம்ஒன்று தரவேண்டும்

முப்பொருளின்உட்பொருளே மூஸிக வாகனனே
முத்தமிழை ஒளவைக்கு அன்போடு அளித்தவனே
சக்தி சிவன் மைந்தனே சரவணனின் அண்ணனே
சித்திபுத்தி நாதனே செல்வவிநாயகனே
தேடியுனை காணத்தினம் ஓடிவரும் பக்தருக்கும்
கூடித்தினம் பாடியுனைத் துதிப்போர்க்கும்
கோடிவரம் நீர்கொடுத்து குறைஅனைத்தும் தீர்ந்திருக்க
ஸ்ரீவரதராஜ செல்வவிநாயகர் வரம் ஒன்று தரவேண்டும்

திருமதி விமலாதேவி சிவனேசன்
நெதர்லாந்து, டென்கில்டர்

# வாழ்த்தும் உள்ளங்கள்

**ஐங்கரன் ஆலய அறங்காவலர் சபையினருக்கும் அடியார்களுக்கும் ஆனைமுகக் கடவுளின் பரிபூரண திருவருள் கிடைப்பதாக**

சிவஸ்ரீ சோமஸ்ரீகரக்குருக்கள்
டோட்முண்ட், ஜேர்மனி

---

**......நெதர்லாந்து நாட்டில் வாழுகின்ற சைவப் பெருமக்கள் அனைவரும் கூடி ஸ்ரீ வரதராஜ செல்வ வினாயகர் ஆலயம் அமைப்பதையிட்டு நாம் அளவிலா மகிழ்வெய்துகின்றோம்.......**

அப்பையா தேவநாயகம்
ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

---

.....The world Saiva Council joins the Temple Board of Trustees in their funds appeal to complete this temple which will be the largest in Europe, with South Indian Temple Architexture........

- World Saiva Council-

---

......சைவ முன்னேற்றச் சங்கம் அதன் சேவைக் கரங்களை உங்கள் வளர்ச்சிக்கு மனமாரத் தருகின்றது. விக்கினங்கள் தீர்ப்பவனுக்கு ஆலயம் அமைப்பதையிட்டு நாம் மிகுந்த சந்தோஷம் அடைகின்றோம..........

–சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில் நிர்வாகத்தினரது வேண்டுகோள்

## வட்டிஇல்லாக் கடன் அல்லது நன்கொடை கோரும் விண்ணப்பம்

ஐக்கிய இராச்சியத்தில் வாழுகின்ற ஆயிரக்கணக்கான இந்து சமயப் பக்தர்களுக்குச் சிவயோகம் என்ற நல்லறக்கட்டளை நிலையம் இப்போது வழங்கி வருகின்ற, சமய, கலாச்சார சமூக சேவைகளை மேலும் பெரிதாக்கி விரிவாக்கும் நோக்குடன், அருள்மிகு முத்துமாரி அம்மன் கோவிலும் சிவயோகம் கலை அரங்க மண்டபமும் நிலைகொண்டுள்ள நிலத்தையும் கட்டிடத்தையும் அற நிலையத்துக்கென வாங்குவதை இயலச் செய்வதற்காக சிவயோகம் அறக்கட்டளை நிலையத்திற்கு நன்கொடைகளை அல்லது வட்டி இல்லாக் கடன் தொகைகளைக் கொடுத்துதவ முன்வருமாறு சிவயோகம் அறக்கட்டளை அறங்காவலர்கள் ஐக்கிய இராச்சியத்திலும் ஐரோப்பாவிலும் வாழ்கின்ற இந்து மக்களை வேண்டிக் கேட்கின்றார்கள். காணியை வாங்குவதற்கு பதினைந்து இலட்சம் பவுண்கள் ஆறு வாரங்களினுள் தேவைப்படுகின்றது.

உலக நலம் விரும்பிகள், இந்து சமயப் பக்தர்கள், கொடைவள்ளல்கள் ஆகியோரிடமிருந்து கிடைக்கின்ற நன் கொடைகளை இந்த அறக்கட்டளை நன்றியுணர்வோடு வரவேற்கின்ற அதே வேளையில், மேலைத் தேசத்தில் இந்து தர்மத்தையும், இந்து கலாசாரத்தையும், இந்துக் கவின் கலைகளையும், இந்து சமயத்தையும், பரப்புவதிலும், மேம்படுத் துவதிலும், வளர்த்தெடுப்பதிலும் அக்கறை கொண்டுள்ள இந்துக்களும் மனித நேயம் மிக்கவர்களும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்படக்கூடிய வட்டியில்லாக் கடன்களைத் தந்துதவும்படி வேண்டி நிற்கிறது.

சிவயோகம் அறக்கட்டளையினர் சிந்திக்கின்ற முறையில் சிந்திக்கின்றவர்களும், ஓர் ஆயிரம் பவுணுக்குக் குறையாத வட்டியில்லாக் கடன்களைத் தந்துதவ விரும்புகிறவர்களும் ஆன இந்து சமய அன்பர்களும் பரோபகாரிகளும் கீழ்க்காணும் படிவத்தை நிரப்பி அனுப்பி வைத்தால் அறக்கட்டளையினர் மகிழ்வார்கள். உங்களிடமிருந்து பணம் கிடைத்ததும், ஏழு நாட்களுக்குள்ளாக, நீங்கள் குறிப்பிடுகின்ற தேதியன்றோ அல்லது அதன் முன்னரோ, நீங்கள் உதவிய வட்டி இல்லாக் கடனைத் திருப்பிச் செலுத்துவதாக வாக்குறுதி அளிக்கின்ற சட்டச் செல்லுபடி கொண்ட வாக்குறுதிப் பத்திரம் ஒன்று அறங்காவலர்கள் கைப்பட உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். காசோலைகள் சிவயோகம் என்ற பெயரில் எழுதப்பட வேண்டும்.

நீங்கள் மனமுவந்து தாராளமாகச் செய்கின்ற பணவுதவிக்கு நாம் நன்றியுடையோம். அருள்மிகு முத்துமாரி அம்மனின் அருளும் கடாட்சமும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பாலிப்பதாகுக.

உங்கள் நம்பிக்கைக்குரிய
நாகேந்திரம் சீவரத்தினம்
தலைவர்,அறங்காவலர் சபை.

---

## கோயில் கட்டிடம் வாங்குவதற்கு வேண்டிய நன்கொடைப்பணம் அல்லது வட்டியில்லாக் கடன் தொகை உதவுதல்

முழுப்பெயர் :..........................................

குடும்பப் பெயர் :..........................................

சொந்தப் பெயர் :..........................................

முகவரி. :..........................................
..........................................
..........................................

தொலைபேசி இலக்கம்
வீடு.............................. தொழிலிடம்..............................

நன்கொடையாகச் செலுத்தும் தொகை..............................

வட்டியில்லாக் கடனாகச் செலுத்தும் தொகை..............................

__________ ..............................
கையொப்பம் திகதி

# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் சிவயோகம் திருமணமண்டபம்

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.**

**500 இருக்கைகள்**

**அழகிய மணவறைகள்**

**அலங்கார ஜோடனைகள்**

**இசைக் கருவிகள்**

**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:

நிர்வாகி

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

சிவயோகம்

# தொலைபேசி: 0208 767 9881

## தொலைநகல்: 0208 767 9881

# சின்முத்திரைத் தத்துவம்

திருக்கோயில்களில் கருவறையைச் சுற்றி வரும் உள் ஆலயத் திருச்சுற்றில் தென்முகமாக வீற்றிருப்பவர் தட்சணாமூர்த்தி. இவர் தென்முகக் கடவுள் எனப்படுவார்.

ஓர் ஆலமரத்தின் கீழ் நால்வருக்கு அவர் வலக்கை விரல்களால் செய்து காட்டும் ஒரு முத்திரை சின்முத்திரை எனப்படும். சின் முத்திரை என்பதற்கு ஞான அடையாளம் என்பது பொருள்.

சிவபெருமானுக்குப் போக வடிவம், யோக வடிவம் என மூன்று வடிவங்கள் கூறப்படும். உமையம்மையுடன் சிவன் இருப்பது போக வடிவம். காலனை உதைப்பது போன்ற தோற்றமுடன் இருப்பது வேக வடிவம். இதனைத் திருக்கடவூரில் காணலாம். அங்கே உள்ள கால சம்ஹார மூர்த்தி வேக வடிவம். தட்சிணாமூர்த்தி வடிவம் யோக வடிவம்.

தட்சிணா மூர்த்தி அமர்ந்திருக்கும் இடம் கல்லால மரத்தின் நிழலில் என்பர். கல்லால மரம் இலை மட்டுமே இருப்பது. பூ,காய்,கனி, அதில் வராது எனக்கூறுவர். இலை மட்டுமே இருப்பதால் பறவைகள் ஒலி அங்கு கேட்பதில்லை. அதனால் பெருமான் உபதேசம் செய்யும் போது ஏதும் தடை ஒலிகள் அங்கு எழா என்பதால் இறைவன் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்தார் என்று கருதுகின்றனர். ஆலமரம் பெரிதாகி நிழல் தரும் ஆதலின் முன்பெல்லாம் அங்கே கல்வி கற்க மாணவர்கள் கூடுவதும் அம்மரத்தின் கீழ் உள்ள மேடையில் ஆசிரியர் அமர்வதும் வழக்கம். இன்றும் சிற்றூர்களில் இக்காட்சியைக் காணலாம். அதுபோலப் பெருமானும் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து உபதேசிக்கின்றார்.

அவரிடம் உபதேசம் பெறுகின்றவர்கள் சனகர். சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய நால்வர் ஆவர். இவர்களைச் சனகாதி முனிவர்கள் எனக்குறிப்பிடுவர். இவர்களுக்குப் பெருமான் மௌன மொழியில் வலக்கை விரல் காட்டி உபதேசம் செய்கின்றார். வலக்கையில் உள்ள ஆள் காட்டி விரலைப் பெருவிரலின் அடிப்பாகத்தில் வளைத்து வைத்து மற்ற மூன்று விரல்களை நிமிர்த்திக் கொண்டிருப்பது அவர் காட்டும் முத்திரையாகும். இதுவே சின் முத்திரை எனப்படும்.

நம் ஒரு கையில் உள்ள ஐந்து விரல்களைக் கொண்டு ஒவ்வொரு பொருள் விளக்கப்படுகின்றது. வலக்கையில் உள்ள ஐந்து விரல்களில் பெரியதாக இருப்பது நடுவிரல். அது ஆணவத்தைக் குறிக்கும். அணி விரல் அல்லது மோதிர விரல் கன்மத்தைக் குறிக்கும். சிறுவிரல் அல்லது சுண்டுவிரல் மாயையைக் குறிப்பது. ஆள்காட்டி விரல் உயிரைக் குறிப்பது. கட்டைவிரல் அல்லது பெருவிரல் இறைவனைக் குறிப்பது.

நமக்குள் இருக்கும் ஆணவம் எப்போதும் தலைதூக்கி நிற்பதால் விரல்களுக்குள் பெரிதான நடுவிரல் ஆணவம் எனப்பட்டது. கிரியைகள் செய்யும்போது மோதிர விரலைத்தான் அதிகம் பயன்படுத்துவர். பூசனையில் இறைவன் திருவுருவிற்குச் சந்தனம் இடல் குங்குமம் இடல், நாம் நெற்றியில் பொட்டு வைத்துக் கொளல் போன்றவற்றை மோதிர விரலில் தான் செய்ய வேண்டும். கன்மங்கள் செய்வதால் அதற்குச் சிறப்பளிக்கவே அவ்விரலுக்கு மோதிரம் போட்டு அணி செய்கின்றோம். நடுவிரல் ஆணவத்தைக் குறிப்பதால் அதற்கு ஏதும் அணி செய்வது வழக்கம் இல்லை. ஆனால் இன்று நடுவிரலிலும் மோதிரம் போட்டுக்கொள்வது வழக்கமாகி வருகின்றது. சிறு விரலைத்தான் நாம் திருமணத்தில் மணமக்கள் கையைப் பற்றும் போது முதலில் பற்றுகின்றோம். எனவே அது மாயை எனப்படுகின்றது. யாரையாவது சுட்டிக்காட்டும் போது பயன் படுத்தப்படும் விரல் ஆதலால் அது ஆட்காட்டி விரல் எனப்படுகின்றது.

சிறிய உருவாக இருந்தாலும் இந்த விரல்களோடு சேராமல் தனியே நிற்பதாலும், இவ்விரல் இன்றி மற்ற விரல்கள் இயங்குவதில்லை ஆதலாலும் அது இறைவனைக் குறிப்பதாகும். இறைவனுக்குப் பெரியோன் என்ற பெயர் உள்ளதால் அது பெருவிரல் என அழைக்கப்படுகின்றது. ஆவணங்களில் முத்திரை வேண்டப்படும்போது பெருவிரல் முத்திரையே இடப்படுகின்றது.

சின் முத்திரை மூலம் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று குற்றங்களோடு உள்ள உயிர் அவற்றை விட்டு இறைவன் திருவடியைச் சேர்கின்றது என்ற பெரும் பொருள் உணர்த்தப்படுகின்றது.

பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி எனச் சிவஞான சித்தியார் சைவசித்தாந்தக் கருத்தை

ஒரே அடியில் சொல்லியுள்ளது போல ஒரே கையில் உள்ள விரல்களால் காட்டுவது சைவசித்தாந்த முத்திரை ஆகும். இவ்வாறின்றி ஆள்காட்டி விரலும் பெருவிரலும் மேற் பகுதியால் இணைந்திருத்தல் வேதாந்த முத்திரை எனப்படும். வேதாந்திகள் ஆணவத்தை ஒப்புக் கொள்வதில்லை எனவே விரல்களால் உணர்த்தப்படும் இம்மோன முத்திரை அவர்களுக்குப் பொருந்தி வருமா என்பது சிந்தித்தற்கு உரியது.

சைவ சித்தாந்தம் சிவன் திருவடியை உயிர் சேர்வதே முத்தி எனக்கொள்வதால் சித்தாந்த முத்திரையில் ஆள்காட்டி விரல் பெருவிரலின் அடியில் நிற்கிறது. நானே பிரம்மம் என்பதை உயிர் உணர்வதே வேதாந்த முத்தி எனப்படுவதால் வேதாந்த முத்திரையில் ஆள்காட்டி விரலும் பெருவிரலும் ஒன்றாக இணைந்து நிற்கிறது.

வேதாந்திகள் நானே பிரம்மம் என்று உணர்வதால் அதனைப் பிரம்மஞானம் என்பர். சைவ சித்தாந்திகள் சிவனே பரம்பொருள் என்று உணர்வதால் அந்த ஞானத்தைச் சிவஞானம் என்பர்.

பொதுவாக மக்கள் எல்லாம் அவன் செயல் என்றும் அவனின்றி ஓரணுவும் அசையாது என்றும் இறைவனை அவன் என்ற சொல்லால் குறிப்பிடுவர். ஆயின் சைவர்கள் அவன் என்று கூறாமல் எல்லாம் சிவன் செயல் சிவனின்றி ஓரணுவும் செல்லாது என்றும் கூறுவர். அப்படிக் கூறுவதுதான் சைவர்களுக்குப் பொருந்தும். ஏனெனில் அவன் என்பது பொதுச் சொல். சிவன் என்பதே சிறப்புச்சொல்.

கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து நல்வாக்கு அறம் உரைத்த செய்தியை மாணிக்கவாசகர்,

**நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை**
**அன்று ஆலின் கீழ் இருந்து அங்குஅறமுரைத்தான்.**
எனக் குறிப்பிடுகின்றார்.

திருஞான சம்பந்தர் தேவாரக் குறிப்பின் படி இத்தட்சிணாமூர்த்தி வடிவில் சின் முத்திரையைச் சிவபிரான் தன் மார்புக்கு நேராக வலக்கை வைத்து உணர்த்துவதாக அறிகின்றோம்.

**பண்ணமரும் நான் மறையார் நூன் முறை பயின்ற திருமார்பில் பெண்ணமரும் மேனியினர்** என்பது அப்பாடற் குறிப்பு. கந்தபுராணத்திலும் **இருவரும் உணரா அண்ணல் ........ உரத்தில் கரதலம் ஒன்று சேர்த்தி மோன முத்திரையைக் காட்டி** என வருகின்றது. எனினும் திருக்கோயில்களில் காணப்படும் தட்சிணாமூர்த்தி வடிவில் சின் முத்திரை இவ்வாறு காணப்படவில்லை. சின் முத்திரையால் சிவபெருமான் செப்பிய சைவ சித்தாந்தச் செம்பொருள் நெறியை பின்பற்றித் தமிழ்ச் சைவர்கள் நல்வாழ்வு பெறுவார்களாக!

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்



**சோ. சிவபாதசுந்தரம் அவர்கள்**

தமிழ் ஒலிபரப்புத்துறையிலும் பத்திரிகைத் துறையிலும் சிறுகதை நாவல் துறைகள் யாவற்றிலும் தன் முத்திரையைப் பதித்துக்கொண்ட ஒரு சாதனையாளர் இவர். இவரை அறியாதவர்கள் இல்லை எனலாம். பத்திரிகைத் துறையிலிருந்து ஒலிபரப்புத் துறைக்குச் சென்ற இவர் வெளியிட்ட ஒலிபரப்புக்கலை இன்றும் ஒலிபரப்புக் கலையின் பைபிளாகவே விளங்குகின்றது. அத்தோடு இலங்கை வானொலியில் அனைத்து மொழிச் சேவைகளுக்கும் அதிகாரியாக விளங்கிய ஒரே தமிழர் திரு சிவபாதசுந்தரம் அவர்களே. எநத வேலையை எடுத்துக் கொண்டாலும் செவ்வனே செய்து முடிக்கும் வல்லமை கொண்ட இவரின் இழப்பு தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு ஒரு பேரிழப்பாகும். இன்று நாம் அவரை நினைவு கூர்ந்து அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# MURUGAN HOROSCOPE CENTRE

**MATCH MAKING**

Choose Your Marriage Partner Through Computerized System To Achieve All Your Future Dreams

**COMPUTERIZED HOROSCOPE**

Based on Vakiya and Thirukanitha Principals.

**PARTICULARS REQUIRED**

Correct Time, date & Place of Birth to Cast your Horoscope

**FORECASTS DETAILS AVAILABLE IN ENGLISH, TAMIL & SINHALA**

| | |
|---|---|
| Match Making | : £ 10.00 ( Included Postage) |
| Computerized Horoscope | : £20.00 ( Included Postage) |

All payments made favour of C.S. Kamalanathan

A/C : 0320 436698-001 SEYLAN BANK
Cinaman Gardens Branch - Colombo

**CONTACT**

MURUGAN HOROSCOPE CENTRE
101/70 Kew Road, (Jalan Bading) Colombo 02, Srilanka
Tel: 075 333092 Fax: 075 346637
Email: kamalan@sltnet.lk, Mobile: 071 717758

# லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
# &
# சில்க் ஹவுஸ்

East Ham மஹாலக்ஷ்மி ஆலயமருகே பிரமிக்கத்தக்க அழகுக்காட்சியறையுடன் வைரத்தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள், அட்டியல்கள்,படையப்பா நெக்கிலஸ்கள் என சகல தங்க நகைகளும் 22 கரட்டில் உறுதியானவை.

திருமணத்திற்கான சிறந்த ரககூறைச் சேலைகள்,
காஞ்சிபுரம் ரங்கோலி,
கோலம், பட்டுப்புடைவைகள்

இன்னும் புதிய மிலேனியத்தில்
உங்கள் புதிய வாழ்வோடு இணைகிறது
DAKSHINOTRI
(டக்ஷ்சிநோற்றி)

தரம்! தெரிவு!! மலிவு!!!
இவையனைத்தையும்
மிக மலிவு விலையில் பெற்றிட

வாரத்தில் ஏழு நாட்கள் திறந்திருக்கும்



**LAKSHMIS JEWELLERS**
**& SILK HOUSE**
**276 High Street North,**
**East Ham E12 6SA**
**Tel: 020 8470 5600**
**Fax: 020 8470 3448**

# WESTERN JEWELLERS

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை



**Specialist in 22 ct. Gold Jewellery**

***Creates the New Woman***

230 UPPER TOOTING ROAD,
LONDON SW17 7EW

**Tel : 020 8767 3445**

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்


---


சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைக்கப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 020 8646 2885) இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14.01. 2001 அன்று வெளியிடப்பட்டது.